Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, NOVEMBER 3, 2022

வியாழக்கிழமை நவம்பர் 03, 2022 | ஒளி: 08 கதிர்: 135 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



## நச்சுப் புகையை சுவாசித்த 54 மாணவர்கள் பாதிப்பு

நச்சுப் புகையை சுவாசித்த காரணத்தால் சுவாசப் பாதிப்புக்கு உள்ளான பாணந்துறையில் உள்ள பிரபல ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த 54 மாணவர்கள், பாணந்துறை வைத்தியசாலையில் நேற்று (02) அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். தொடர்ச்சி P2

பட்ஜெட்டின் பின்னர்

## அமைச்சரவை மறுசீரமைப்பு

### பசில், சஜித் தரப்பில் சிலர் புதிதாக இணைவார்களாம்

ஆர். யசி

வரவு - செலவு திட்டத்தின் பின்னர் மீண்டும் அமைச்சரவை மறுசீரமைப்பை மேற்கொள்வது குறித்து ஆராய்வதாக அமைச்சரவை மூலமாக தெரியவருகின்றது. இதன்போது ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ரணில் விசுவாசிகள் சிலரையும், பிரதான எதிர்க்கட்சியின் ஒரு சிலரையும் இணைத்துக்கொள்ளவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் தெரிந்துகொள்ள முடிகின்றது. தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பவங்களில் இருந்து

## ரிஷாட் விடுதலை



தொடர்ச்சி P2

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை வழக்கில் இருந்து விடுவிக்குமாறு, கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் திலின கமகே, நேற்று (02) உத்தரவிட்டார்.

பருவ மழைக்காலம் நிறைவடைந்ததும்

## வடக்கில் காணி விடுவிப்பு

### ஜனாதிபதி அமைச்சர் டக்ளஸிடம் உறுதி

வடக்கில் காணிகளை விடுவிப்பது தொடர்பில் பருவ மழைக்காலம் நிறைவடைந்ததும் சாதகமான, தீர்க்கமான முடிவெடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அபிலாஷைகளுக்கு தீர்வுகாணும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த உத்தரவாதத்தை வழங்கியுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2



வழமையான பட்ஜெட் என்றால்

## நாடு பேரழிவை சந்திக்கும்



பா.நிரோஸ்

நாடு பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு முகங்கொடுத்துள்ள தற்போதைய நிலையில், வழமையாக சமர்ப்பிக்கும் வரவு- செலவு திட்டத்தையே இம்முறையும் அரசாங்கம் சமர்ப்பித்தால் நாடு பேரழிவை சந்திக்கும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா எச்சரித்தார். தொடர்ச்சி P2

பாதுகாப்புக்கான

## நிதி ஒதுக்கீடுகளை குறைக்க வேண்டும்



பா.நிரோஸ்

அரசாங்கத்திடம் முறையான திட்டங்கள் இல்லை என்பதால் அடுத்த வருடமும் பணத்தை அச்சிட வேண்டிய நிலையே ஏற்படுமென எச்சரிக்கும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்ரமரத்ன, எதிர்வரும் வரவு செலவு திட்டத்தில் பாதுகாப்புத்துறைக்கான நிதி ஒதுக்கீடுகளை குறைக்க வேண்டுமெனவும் தெரிவித்தார். தொடர்ச்சி P2

அரசாங்கத்தை கண்டித்து

## கொழும்பில் மக்கள் பேரணி

பா.நிரோஸ்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டும்; அடக்குமுறைகளை நிறுத்த வேண்டுமென வலியுறுத்தி தொழிற்சங்கங்கள், பிரதான எதிர்க்கட்சிகள், சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து கொழும்பில் நேற்று (02) பாரிய எதிர்ப்புப் பேரணியை முன்னெடுத்தன.

இதேவேளை நேற்றைய போராட்டங்களை முன்னெடுப்பதற்கான எந்தவோர் அனுமதியையும் போராட்டக்காரர்கள் பொலிஸாரிடம் பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவித்து நேற்றைய எதிர்ப்புப் பேரணியில் கலந்துகொள்ளவிருந்த பிரதான எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டோருக்கு பொலிஸார் அறிவித்தல்களை வழங்கி இருந்தனர். எதிர்ப்புப் பேரணி செல்லும் வழிகளிலும் பொலிஸார் அதிகளவில் குவிக்கப்பட்டிருந்தனர். நீர்த்தாரை பிரயோக வண்டிகளும் நிறுத்தப்பட்டிருந்தபோதிலும், போராட்டக்காரர்கள் திட்டமிட்டப்படி நேற்றைய எதிர்ப்புப் பேரணியை முன்னெடுத்திருந்தனர். தொடர்ச்சி P2




## பிரியமாலியின் பிணை கோரிக்கை நிராகரிப்பு



### தேரருக்கும் இசுறுவுக்கும் விளக்கமறியல்

அரசியல்வாதிகள் மற்றும் பிரபல வர்த்தகர்கள் உள்ளிட்ட பலரிடம் நிதி மோசடி செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள திலினி பிரியமாலியின் பிணைக் கோரிக்கையை நிராகரித்த கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் திலின கமகே, அவரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, நேற்று (02) கட்டளை பிறப்பித்தார்.

மேலும், குறித்த மோசடியுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த திலினியின் காதலரான இசுறு பண்டார, மற்றும் நேற்று முன்தினம் (01) கைது செய்யப்பட்ட பொரளை சிறிசுமண தேரர் ஆகியோரையும் 16ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்தச் சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என்பதாலும் இவர்களுக்கு பிணை வழங்கினால், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட வாய்ப்புள்ளது என்ற காரணத்தையும் கருத்தில் கொண்ட நீதவான், பிணை கோரிக்கையை நிராகரித்தார். தொடர்ச்சி P2



## பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் அவசியம்

### ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வலியுறுத்து

நெருக்கடி நிலைமைகளில் இருந்து இலங்கையை மீட்கும் நகர்வுகளில் ஐரோப்பிய ஒன்றியம் முழுமையான ஒத்துழைப்புகளை இலங்கைக்கு வழங்க தயாராக இருக்கின்றது. எனினும் இலங்கை அதன் பொறுப்புக்கூறல் மற்றும் ஜனநாயக சுதந்திரங்களைப் பாதுகாப்பதில் முன்னேற்றம் காண வேண்டும் என ஐரோப்பிய வெளிவிவகார சேவையின் ஆசிய மற்றும் பசிபிக் பிரிவின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் பௌலா பம்பாலோனி வலியுறுத்தியுள்ளார். தொடர்ச்சி P2

வெளிநாட்டவர் – இலங்கையர்

## திருமண பதிவுக்கான இடையூறுகளை நீக்கவும்

வெளிநாட்டவர்களுக்கும் இலங்கையர்களுக்கும் இடையிலான திருமணங்களை பதிவு செய்வதில் உள்ள இடையூறுகளை நீக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன, பதிவாளர் நாயகத்திற்கு நேற்று (02) பணிப்புரை விடுத்துள்ளார் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த சுற்றறிக்கையை உடனடியாக இரத்துச் செய்யுமாறும் பிரதமர் அறிவுறுத்தியுள்ளார். தொடர்ச்சி P2

அமெரிக்க அன்பளிப்பு கப்பல்

## கொழும்பை வந்தடைந்தது

அமெரிக்க அரசாங்கத்தால் இலங்கை கடற்படைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட, அமெரிக்காவின் கடலோர கண்காணிப்புக் கப்பலான P-627 நேற்று (02) காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. கடந்த வருடம் ஒக்டோபர் 26ஆம் திகதி குறித்த P-627 கப்பலை உத்தியோகபூர்வமாக இலங்கைக்கு கையளிக்கும் நிகழ்வு, அமெரிக்காவின் சியேட்டல் துறைமுகத்தில் இடம்பெற்றது. அதனை தொடர்ந்து இந்தக் கடல் சார் கண்காணிப்பு கப்பல் செப்டெம்பர் 03 ஆம் திகதி அமெரிக்காவின் சியேட்டல் துறைமுகத்தில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்டது. தொடர்ச்சி P2




இறக்குமதி செய்யப்படும் பொதியிடப்பட்ட

## பொருட்களின் விலையை குறிப்பிடுவது கட்டாயம்

### அடுத்த வாரமும் வர்த்தமானி வெளியாகும்

பொதியிடப்பட்ட பண்டங்கள், வகுதிகள் மற்றும் உற்பத்திகளை குறித்து அனைத்து இறக்குமதியாளர்களும் அதிகபட்ச சில்லறை விலை மற்றும் இறக்குமதியாளரின் பெயர் மற்றும் பதிவு செய்யப்பட்ட முகவரியை நவம்பர் 1 முதல் அமலாகும் வகையில், ஆங்கிலத்தில் தெளிவாக குறிப்பிட வேண்டும் என, நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது.

சுவிங்கம் உள்ளடங்கலான இனிப்பு பண்டங்கள், சொக்கலேட், பிஸ்கட், கேக், வாசனை சவர்க்காரம் உள்ளிட்ட பொருட்களை இறக்குமதி செய்பவர்களுக்கு இந்த உத்தரவு பொருந்தும் என்று அதிகார சபையின் அதிவிசேட வர்த்தமானியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதேவேளை, இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தும் வகையிலான மற்றுமொரு வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

துறைசார் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு அமைய, வாகன உதிரிப் பாகங்கள், அழகுசாதனப் பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்படவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. நாட்டின் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு ஓகஸ்ட் 23ஆம் திகதி 1,465 பொருட்களுக்கான இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டிருந்த போதும் 708 பொருட்களுக்கான இறக்குமதி தடை, அண்மையில் தளர்த்தப்பட்டிருந்தது.

PAGE 1 தொடர்ச்சிகள்

## அமைச்சரவை மறுசீரமைப்பு

கடந்த சில தினங்களாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தனவின் கொழும்பு இல்லத்தில் இது குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதுடன், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களுடனும் இவ்விடயங்கள் ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன்போதும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதரவை பலப்படுத்தும் நகர்வுகள் குறித்து ஆராயப்பட்டிருந்தது. தற்போது முன்வைக்கப்படவுள்ள வரவு- செலவு திட்டத்தை தொடர்ந்து மீண்டும் அமைச்சரவை மறுசீரமைப்பு குறித்து ஆராய்வதாகவும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் சிலரையும், சஜித் தரப்பின் மூன்று உறுப்பினர்களையும் அமைச்சரவையில் இணைத்துக்கொள்ளவுள்ளதாகவும் கலந்துரையாடப்பட்டதாக தெரியவருகின்றது.

எவ்வாறு இருப்பினும் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக மீண்டும் நியமிக்க வாய்ப்புகள் உள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஒரு தரப்பினர் கூறியிருந்த போதிலும், தினேஷ் குணவர்தனவை பிரதமர் பதவியில் இருந்து நீக்க வாய்ப்புகள் இல்லை எனவும் ரணில் அரசாங்கத்தில் அவரே தொடர்ந்தும் பிரதமராக செயற்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ரிஷாட் விடுதலை

போதிய சாட்சியங்கள் இல்லாததால் வழக்கை தொடர வேண்டாம் என்று சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட ஆலோசனையை அடுத்தே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து அவரை விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தொடர் பயங்கரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்டோருக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி ரிஷாட் எம். பி கைது செய்யப்பட்டிருந்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட அவர் 111 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நச்சு புகையை சுவாசித்த 54 மாணவர்கள் பாதிப்பு

பாடசாலைக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் வயர்கள் எரிக்கப்பட்டமையால் அதிலிருந்து வெளியான நச்சுப்புகை காரணமாக மாணவர்கள் பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்கள், அம்பியூலன்ஸ்கள் மூலம் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், சம்பவம் குறித்து அறிந்து பாடசாலைக்கு விரைந்த பெற்றோர் சிலர், தங்களுடைய பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் சென்றுள்ளனர் என்றும் தெரியவருகிறது. மாணவர்களின் சுவாசப் பிரச்சினைக்கான சரியான காரணம் கண்டறியப்படவில்லை என்று தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நாடு பேரழிவை சந்திக்கும்

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.அவர் மேலும் கூறுகையில், நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை கடந்த இரு வருடங்களில் பாரியளவில் அதிகரித்துள்ளது. எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால், சமர்ப்பிக்கப்படும் வரவு செலவு திட்டத்தில் எந்தவிதமான பயனும் இல்லை எனவும் தெரிவித்தார்.

நாம் அரசியல்வாதிகள் என்பது உண்மையே, நாம் எதிர்க்கட்சியில் இருப்பதும் உண்மையே. இதற்காக அரசாங்கம் கொண்டுவரும் அனைத்து வேலைத்திட்டங்களையும் நாம் எதிர்க்கப்போவதில்லை எனவும் தெரிவித்தார்.

முன்னொருபோதும் இல்லாத வகையில் பொருளாதாரம் இந்த வருடமே வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி, திறைச்சேரி ஆகியன தெரிவித்துள்ளன. ஆகவே நாட்டின் பொருளாதாரம் நூற்றுக்கு 9 சதவீதம் வீழ்ச்சியடையுமென எச்சரிக்கப்பட்டுள்ளது. டைல்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள் போல குளியல் அறைக்கு தேவையான அனைத்து பொருள்களையும் இறக்குமதி செய்ய தடை விதிக்க வேண்டுமென அரசாங்க நிதி பற்றிய குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு குழுவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இணங்கவில்லை. தேசிய உற்பத்திகளை கட்டியெழுப்ப வேண்டும். அதனால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதிகளவான வரி அதிகரிக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் முழு இறக்குமதிக்கும் தடை விதிக்க கோருவது பொறுத்தமற்றது எனவும் தெரிவித்தார்.

## நிதி ஒதுக்கீடுகளை குறைக்க...

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலைகள் நூற்றுக்கு 200 - 300 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. நாட்டின் வருமானத்தை அதிகரிக்க வரி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், வரிகள் ஊடாகக் கிடைக்கும் வருமானம் 11 சதவீதமாக அதிகரிக்கும் என அரசாங்கம் கூறுகிறது. இது பகல் கனவாகும். இதனை செய்யவே முடியாது எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் செலவுகளைக் குறைக்கவும் வரவு செலவு திட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதுகாப்புக்கென 410 பில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த செலவுகளைக் குறைப்பதால் நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படுமென நினைக்கலாம். பாதுகாப்பு பயிற்சிகள், புலனாய்வு, தொழிநுட்பங்களுக்கு செலவிட வேண்டும். அதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. ஆனால், செலவுகளைக் கருத்திற்கொண்டு அத்தியாவசிய தேவைகளை மக்கள் நிறுத்துவார்களாக இருந்தால், பாதுகாப்புத்துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளின் செலவுகளையும் குறைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். அடுத்த வருடத்துக்கான வரவு செலவு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. எனவே அடுத்த வருடமும் நாணயத்தாள்களை அச்சிட வேண்டிய நிலையே அரசாங்கத்துக்கு ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

## வடக்கில் காணி விடுவிப்பு

வலி வடக்கு, மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்திற்கு நேற்று (02) சென்ற அமைச்சர் அங்கு கடற்றொழிலாளர்களுடனான சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பருவ மழைக்காலம் நிறைவடைந்ததும் நேரடியாக சம்மந்தப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் செய்து தீர்க்கமான சாதகமான முடிவுகளை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளார். எனவே, கடந்த காலங்களில் தமிழ்த்தரப்புகள் விட்ட தவறுகள் என்னவென்றால் கிடைத்த வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதே. இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டிருக்காது. தற்போது கிடைக்கும் சாதகமான வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு இனியாவது இருப்பதை பாதுகாத்துக்கொண்டு அதனை முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

> **கடந்த காலங்களில் தமிழ்த்தரப்புகள் விட்ட தவறுகள் என்னவென்றால், கிடைத்த வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதேயாகும்.**

பிரச்சினைகள் தீர்வை நோக்கி போகவேண்டுமேயொழிய அதனை குழப்பிக்கொண்டு போகும் நோக்கம் எனக்கில்லை என அமைச்சர் தெரிவித்தார். வலி வடக்கு, மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்திற்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கு முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளை பார்வையிட்டதுடன் பிரதேசக் கடற்றொழிலாளர்களினால் முன்வைக்கப்பட்ட அபிப்பிராயங்கள் தொடர்பில் ஆராய்ந்தது தேவையான ஆலோசனைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கினார்.

## கொழும்பை வந்தடைந்தது

115 மீற்றர் நீளம் கொண்ட இக்கப்பலின் அதிகபட்ச வேகம் மணித்தியாலத்துக்கு 29 கடல் மைல்களாகும். அத்தோடு சுமார் 14 கடல் மைல் தொலைவுக்கு கண்காணிப்புக்களை மேற்கொள்ளக்கூடிய வசதிகளும் இந்தக் கப்பலில் காணப்படுகின்றது. சியேட்டலில் இருந்து வெவ்வேறு நாடுகளின் துறைமுகங்களுக்கு பயணித்த கப்பல் இறுதியாக சிங்கப்பூர் துறைமுகத்தில் தரித்து நேற்றைய தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த நிலையில், இலங்கை கடற்படையின் கலாசாரத்துக்கமைய கப்பல் வரவேற்கப்பட்டது.

இந்நிகழ்வு கடற்படை தளபதி வைஸ் அத்மிரால் நிஷாந்த உலுகேதென்ன தலைமையில், பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்பு பதவிநிலை தலைமை அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பதிரண மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பங்கேற்றிருந்தனர். எவ்வாறிருப்பினும் கடல் பிராந்தியங்களில் சமுத்திர சவால்களை வெற்றிகொள்வதற்கான ஒற்றுமையை பலப்படுத்துவதற்காகவும், அதனை மேம்படுத்துவதற்காகவும் அமெரிக்காவினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள மூன்றாவது கப்பல் இதுவாகும். இதற்கு முன்னர் கடந்த 2005ஆம் ஆண்டு 'சமுதுரு' மற்றும் 2018ஆம் ஆண்டு 'கஜபாஹு' என்ற இரு கப்பல்களையும், அமெரிக்கா இலங்கை கடற்படைக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் மக்கள் பேரணி

கொழும்பு எல்பிஸ்டன் திரையரங்குக்கு அருகில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி கொழும்பு கோட்டை ரயில் நிலையம் நோக்கிப் பயணித்தது. இதன்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள வசந்த முதலிகே, சிறிதம்ம தேரர் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனவும் அரசாங்கத்துக்கு எதிரான பதாதைகளை ஏந்தியவாறும் இந்த எதிர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. எதிர்ப்புப் பேரணியில் இசை எழுப்பியவாறு வாகன பேரணியும் இடம்பெற்றது.

இந்த எதிர்ப்புப் பேரணியில் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் கலந்துகொண்டதோடு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருனிகா பிரேமசந்திர உள்ளிட்ட பலர் பேரணியில் கலந்துகொண்டனர்.

எதிர்ப்புப் பேரணி திட்டமிட்டபடி கொழும்பு கோட்டை ரயில் நிலையம் நோக்கிப் பயணிப்பதற்கு தடையை ஏற்படுத்தும் வகையில் கொழும்பு மிதக்கும் சந்தைக்கு முன்பாக பொலிஸார் குவிக்கப்பட்டு வீதி மறிக்கப்பட்டது. இதன்போது பேரணியில் கலந்துகொண்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருனிகா பொலிஸாரை தள்ளிக்கொண்டு முன்னேறிச் செல்ல முயற்சித்ததால் பதற்றம் ஏற்பட்டதோடு, பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.











## திருமண பதிவுக்கான இடையூறுகளை..

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் நேற்று (02) காலை நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போதே பிரதமர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார் என்று அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டவர் ஒருவரை திருமணம் செய்யவேண்டும் எனின், அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படும் வலிதான பாதுகாப்பு அறிக்கையை பதிவாளர் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது குறித்து பாதுகாப்பு அமைச்சினால் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்தைக் கொண்டே திருமணத்தை பதிவு செய்ய முடியும் என்று கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.

இதற்கு சுமார் 2 வாரங்கள் தேவைப்படுகின்ற நிலையில், வெளிநாட்டவர் மற்றும் இலங்கையருக்கு இடையிலான திருமணங்களை நடத்துவதில் பல அசௌகரியங்களை தம்பதிகள் எதிர்கொண்டு வருகின்ற நிலையிலேயே பிரதமரால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## பிரியமாலியின் பிணை கோரிக்கை...

இதேவேளை, திலினி பிரியமாலிக்கு சொந்தமான ஏழு வர்த்தக நிறுவனங்களில் தமது பணத்தை முதலீடு செய்த பல அரசியல்வாதிகளும் பிரபலங்களும், பல்வேறு காரணங்களுக்காக பொலிஸில் முறைப்பாடு செய்யவதற்கு தயங்குகின்றனர் என்று, குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் (சீ.ஐ.டி) கடந்த அமர்வில் அறிவித்திருந்தனர்.

மோசடியான முறையில் பெறப்பட்ட பணத்தில் வருமானம் ஈட்டாமல், சந்தேகநபர் எவ்வாறு 41 இலட்சம் ரூபாயை மாதாந்தம் செலவிட்டார் என்பது குறித்த விவரம் இதுவரையில் வெளிவரவில்லை என்றும் சீ.ஐ.டியினர் அறிக்கை சமர்ப்பித்திருந்தனர்.

பிரதான சந்தேகநபரான திலினி பிரியமாலிக்கு எதிராக நீதவான் நீதிமன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றத்தில் ஏழு நீதிமன்ற வழக்குகள் தற்போது நிலுவையில் இருப்பதாகவும் மன்றுக்கு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் அவசியம்

மேலும், நல்லிணக்க முயற்சிகளை ஊக்குவிக்கும் அதே வேளையில் மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தியுள்ள அவர், அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிராக தேவையற்ற சக்தியைப் பயன்படுத்துவதை ஐரோப்பிய ஒன்றியம் கண்டிப்பதாகவும், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் தரநிலைகளுக்கு முழுமையாக இணங்கும் வரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இடைநிறுத்துமாறு இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடந்து மூன்று ஆண்டுகள் முடிவடைந்துள்ளன. எனினும் தாக்குதலுக்குப் பின்னர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் விரிவான பயன்பாடு குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவலை கொண்டுள்ளதாகவும் பம்பாலோனி தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி தேர்தலை நடத்த ரணில் முயற்சி

பா.நிரோஸ்



ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்துவதற்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பதாக தெரிவிக்கும் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, தன்னோடு போட்டியிட ஜனாதிபதி வேட்பாளர்கள் எவரும் இல்லையென ரணில் நினைத்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.


சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைமையகத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார், போராட்டத்தில் கலந்துகொள்பவர்களை தேசத்துரோகிகள் என ஐ.தே.கவின் எம்.பி வஜிர அபேவர்தன கூறியிருக்கிறார். இது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

வஜிரவின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டில் அமைதியான போராட்டங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் நாட்டில் அவசரகால சட்டத்தைப் பயன்படுத்த வேண்டாம் எனவும் பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறார். எனவே வஜிர கூறும் கருத்து சரியா அல்லது பாராளுமன்றத்தில் ரணில் கூறிய கருத்து சரியா என்பது குறித்து கேள்வி எழுகின்றது.

பாராளுமன்றத் தேர்தலை அரசாங்கம் காலந்தாழ்த்தப் பார்க்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்த வேண்டுமென எதிர்பார்க்கின்றார். ஜனாதிபதி தேர்தலில் தன்னோடு போட்டியிட எவரும் இல்லை என ரணில் நினைக்கிறார். அது தவறான எண்ணப்பாடாகும். தேவையான அளவு ஜனாதிபதி வேட்பாளர்கள் நாட்டில் உள்ளனர்.

அதுமட்டுமல்ல, இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டும் என்பதில் சகல எதிர்க்கட்சிகளும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சியில் இருக்கும்போது அடக்குமுறைகளை மேற்கொள்ள வேண்டாம்; பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டாம் எனக் கூறிவந்தார். இக்கோரிக்கைகளை முன்வைத்தே கொழும்பில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.



# தேர்தல் வெற்றிக்காகவே என்னைக் கைது செய்தனர்

தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, என்னை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து, 7 மாதங்கள் தடுத்து வைத்திருந்தார் என பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் டுவிட் செய்துள்ள ரிஷாட், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ ஆட்சிக்கு வந்ததும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் முழு முஸ்லிம் சமூகத்தின் மீதும் என் மீதும் குற்றச்சாட்டுகளை சுமத்தினார். அடுத்த தேர்தலில் வெற்றி பெறலாம் என நினைத்து என்னை 7 மாதங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்து வைத்திருந்தார்.

எவ்வாறாயினும், பதவிக்காலம் முடிவதற்குள் நாட்டு மக்களால் கோட்டாபய ராஜபக்‌ஷ விரட்டியடிக்கப்பட்டார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் எனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் நான் விடுதலை அடைந்தேன். உடனடியாக இல்லை என்றாலும் உண்மை கண்டிப்பாக வெற்றிபெறும் எனவும் ரிஷாட் குறிப்பிட்டுள்ளார்.

# ‘P-627’ கப்பலை பார்வையிட்டார் அமெரிக்க தூதுவர்

அமெரிக்க அரசாங்கத்தால் இலங்கை கடற்படைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட, அமெரிக்க கடலோர ரோந்துக் கப்பலான P-627 நேற்று (02) காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. கப்பலில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் பங்கேற்றிருந்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், கப்பலை பார்வையிட்டதுடன், இந்தக் கப்பல் இலங்கையின் கடல்சார் இறையாண்மையை மேம்படுத்தும் மற்றும் பகிரப்பட்ட பாதுகாப்பு இலக்குகளை



ஆதரிக்கும் எனவும் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



# சபாநாயகரை சந்தித்தார் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை, இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ஸன்டெல் எட்வின் ஷால்க் அண்மையில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்கவும் கலந்துகொண்டிருந்தார். இலங்கை தென்னாபிரிக்க பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் ஊடாக இரு தரப்பு விஜயங்களையும் அதிகரிக்க முடியும் என்கிற உயர்ஸ்தானிகரின் கருத்துக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேர்தனவும் இணங்கியுள்ளார்.

பல்வேறு விடயங்களில் தென்னாபிரிக்காவின் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்ட இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர், தமது நாட்டின் உண்மையைக் கண்டறியும் குழு வெற்றியளிப்பதற்கு தென்னாபிரிக்க அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள் தொடர்பிலும் விளக்கமளித்தார்.

ஆணைக்குழு அமைக்கப்படுவதற்கு முன்னர் அதில் பங்களிக்கவிருக்கும் குழுவினருக்கிடையில் இறுதி இணக்கப்பாட்டை எட்டுவது குறித்து பல்வேறு தரப்பினரின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் ஆரம்பகட்டக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனூடாக அனைத்துத் தரப்பினரதும் முழுமையான ஒத்துழைப்புடன் ஆணைக்குழுவை முன்னெடுத்துச் சென்று அதில் வெற்றியடைய முடிந்ததாகவும் தெரிவித்தார்.

# மூழ்கும் கப்பலை மீட்காது வேடிக்கை பார்க்கின்றனர்

பா.நிரோஸ்




மூழ்கிக்கொண்டிருக்கும் ‘டைட்டானி’க் கப்பலையே தான் பொறுப்பேற்றதாக ஜனாதிபதி கூறுகிறார். ஆனால், ஜனாதிபதியின் அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களோ மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலை மீட்பதற்குப் பதிலாக வேடிக்கை பார்க்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபிர் ஹாசீம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். மத்திய வங்கியிடம் தற்போது வெறும் 1.7 பில்லியன் டொலரே அந்நிய செலாவணியாக கையிருப்பில் உள்ளது. இதில் சீனா வழங்கிய 1.5 பில்லியன் டொலரை எதற்கும் பயன்படுத்த முடியாது. எனவே 200 மில்லியன் டொலரையே பயன்படுத்த முடியும். இதற்கு மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், பி.பி. ஜயசுந்தர உள்ளிட்ட பொருளாதார கொலைகாரர்களே காரணகர்த்தாக்களாவர்.

கோட்டாபய ராஜபக்‌ஷவின் ஆட்சிக்குப் பின்னர், நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை 90 இலட்சமாக அதிகரித்துள்ளது. இதற்கு ராஜபக்‌ஷர்களும், பொதுஜன பெரமுன கட்சியும் பொறுப்புக்கூற வேண்டும். இதற்காக நாட்டு மக்களிடம் அவர்கள் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும். குறைந்தது மூன்று மாதங்களுக்குத் தேவையான அளவு அந்நிய செலாவணியை பெற்றுகொண்டால் மாத்திரமே நாடு ஸ்திரத்தன்மைக்கு செல்லும். மூழ்கிக்கொண்டிருக்கும் ‘டைட்டானிக்’ கப்பலை தான் பொறுப்பேற்றுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். இது உண்மையாக இருக்கலாம். ஆனால் ஜனாதிபதி இவ்வாறு கூறும்போது, அமைச்சர்கள் பொறுப்பற்ற வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலை மீட்பதற்குப் பதிலாக, அதிலிருந்து அமைச்சர்கள் வேடிக்கை பார்க்கின்றனர். புதிய களனி பாலத்திலிருந்து அதுருகிரிய வரையிலான அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தில் பாரிய ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இதற்குப் பின்னால் உள்ள அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் என அனைவருக்கு எதிராகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் இலங்கை பாராளுமன்றம்



இலங்கை பாராளுமன்றத்தால் பல்கலைக்கழகங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான குறுகியகால பாடநெறி யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஒக்டோபர் 31ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இவ்வாறான குறுகியகால பாடநெறியொன்றை ஆரம்பித்தமை குறித்து நன்றி தெரிவித்த யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா, பாடநெறியைத் தொடர்வதன் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்கு சிறு விரிவுரையொன்றையும் நிகழ்த்தினார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் ஊடகத்துறை மாணவர்களின் கல்விக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் பாடநெறிக்கான வளவாளர்களாகப் பாராளுமன்ற செயலகத்தின் உயர் அதிகாரிகள் இணைந்துகொள்வர். இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை பாராளுமன்றத்தின் சட்டவாக்க சேவைகள் பணிப்பாளரும், தொடர்பாடல் பணிப்பாளருமான எச்.ஈ ஜனகாந்த சில்வா, நிர்வாகப் பணிப்பாளர் ஜீ.தட்சணராணி, ஊடக முகாமையாளர் நிம்மி ஹாத்தியல்தெனிய உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்தப் பாடநெறியின் ஊடாக ஜனநாயகம் மற்றும் பாராளுமன்ற செயற்பாடுகள், பாராளுமன்றத்தின் சட்டவாக்க நடைமுறைகள், பாராளுமன்ற அமைப்பின் பரிணாமம், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக்கோவை, நிலையியல் கட்டளைகள், பொதுமக்கள் சேவைச் செயற்பாட்டுக்கான தொடர்பு, பெண்கள் பிரதிநிதித்துவம் போன்ற விடயதானங்கள் குறித்து புரிதல்கள் வழங்கப்படவுள்ளன. பாராளுமன்ற விவகாரங்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான பாடநெறியில் நான்கு விரிவுரைகள் மற்றும் பாராளுமன்ற சுற்றுப்பயணம் என்பன உள்ளடங்கியுள்ளன. இலங்கை பாராளுமன்றம், கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்து அரசியல் விஞ்ஞானம் மற்றும் பொதுக் கொள்கைகள் திணைக்களத்தின் இறுதியாண்டு பட்டதாரி மாணவர்களுக்காக இவ்வாறான குறுகிய பாடநெறியை முதன் முதலில் ஆரம்பித்திருந்தது. இந்தப் பாடநெறிக்கான ஒருங்கிணைப்பை பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாணவன் மீது தாக்குதல் நடாத்திய 3 மாணவர்கள் கைது

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நகரிலுள்ள ஆண்கள் பாடசாலை ஒன்றைச் சேர்ந்த மாணவர் குழு ஒன்று இன்னோரு ஆண்கள் பாடசாலையைச் சேர்ந்த மாணவன் ஒருவன் மீது தாக்குதல் நடாத்தியதில் அந்த மாணவன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் தாக்குதலை மேற்கொண்ட 3 மாணவர்களை நேற்று (2) கைது செய்துள்ளதாகவும் இரு மாணவர்கள் தலை மறைவாகியுள்ளதாகவும் மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர். இதில் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்த அவனை தாக்குதல் மேற்கொண்ட மாணவர் குழு வைத்தியசாலையில் கொண்டு சென்று விபத்தில் படுகாய மடைந்ததாக அனுமதித்துவிட்டு அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இதனையடுத்து கொக்குவில் மற்றும் நகர் பகுதியைச் சேர்ந்த 3 மாணவர்களை கைது செய்ததுடன் தாக்குதலுக்கு பயன்படுத்திய நக்கிள்ஸ் மற்றும் தாக்குகின்ற போது கையடக்க தொலைபேசியில் எடுக்கப்பட்ட வீடியோக்களை மீட்டுள்ளதுடன் தலைமறைவாகியுள்ள இரு மாணவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கைது செய்யப்பட்ட 3 பேரையம் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# காணிகளை விடுவிக்கக்கோரி போராட்டம்

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கு பகுதியில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்க கோரி நேற்று (02) தெல்லிப்பழை சந்தியில், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பொது மக்கள், சமூக ஆர்வலர்களின் பங்கேற்புடன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.





மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு மாதத்துக்குள்

# 700க்கும் அதிகமான மாடுகள் நோயால் இறப்பு

## கால்நடை பண்ணையாளர் நிர்க்கதி

வா. கிருஸ்ணா

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒக்டோபர் மாதத்தில் மட்டும் 700க்கும் அதிகமான மாடுகள் நோயால் இறந்துள்ளதாக கால்நடை பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைகள் இறப்பது குறித்து, மட்டக்களப்பு சர்வமத பேரவை, மயிலத்தமடு, மாதவனை கால்நடை வளர்ப்பு கமநல அமைப்பு ஆகிய அமைப்புகள் இணைந்து, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட உதவி



அரசாங்க அதிபர் நவேஸ்வனுடன் சந்திப்பை மேற்கொண்டது.

இதன்போது தெரிவிக்கப்பட்டதாவது: அண்மைக்காலமாக கிரான், செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மாடுகள் திடீர்திடீர் என இறக்கின்றன. இவ்வாறு கால்நடைகள் உயிரிழக்கும்போது, அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் முறையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லையென பண்ணையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

மேலும், கடந்த ஒன்பது தினங்களுக்குள் 200 மாடுகள் உயிரிழந்துள்ளதாகவும் ஏற்கெனவே இதற்கான தடுப்பூசிகள் வழங்கப்பட்டிருந்தால், மாடுகள் இறப்பதை தவிர்த்திருக்கமுடியும் எனவும் மயிலத்தமடு, மாதவனை கால்நடை வளர்ப்பு கமநல அமைப்பின் தலைவர் எஸ். நிமலன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள்

# விவசாய உதவித் திட்டத்திலிருந்து புறக்கணிக்கப்பு

## உரிய தீர்வை வழங்குமாறு மாவட்ட செயலாளரிடம் கோரிக்கை

சுப்பிரமணியம் பாஸ்கரன்

விவசாய உதவித் திட்டத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு, உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று, கிளிநொச்சி மாவட்ட செயலாளருக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று முன்தினம் (01) அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கோரக்கை முன்வைத்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தால், வடக்கு மாகாணத்தில் விவசாயிகளுக்கு, ஓர் அந்தர் அசேதனப் பசளையும் 30,000 ரூபாய் நிதியும் வழங்கும் உதவித் திட்டத்தில், கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் மட்டும் புறக்கணிக்கப்பட்டு உள்ளார்கள். இந்தப் புறக்கணிப்பு தொடர்பாக, நடவடிக்கை எடுக்குமாறும் கோரியே மேற்குறித்த கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் மேற்படி திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள போதும், கிளிநொச்சி மாவட்டத்தில் வறிய விவசாயிகள் எவருமில்லை என்று தவறான உற்பத்தித் தரவுகள் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து, உதவித் திட்டம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனத்தின் தரவுகளின் அடிப்படையில், கிளிநொச்சி மாவட்டத்தின் 10 கமநல சேவை நிலையங்களின் கீழும் வறுமையிலுள்ள விவசாயிகளில், ஓர் ஏக்கருக்கு குறைவான நிலப்பரப்பில் 1,523 விவசாயிகளும் 1 - 2.5 ஏக்கருக்கு இடைப்பட்ட நிலப்பரப்பில் 6,237 விவசாயிகளும் இவ்வருடம் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலையில் ஊடகவியலாளர்களால்

# துண்டுப் பிரசுரம் விநியோகம்

தீஷான் அஹமட்

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனை இன்மையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சர்வதேச தினம் நவம்பர் மாதம் 2 ஆம் திகதியாகும்.

அந்தவகையில், திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று (02) விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் திருகோணமலை நகர், பஸ் தரிப்பு நிலையம், சந்தை ஆகிய பகுதியில் பொதுமக்களுக்கு



விநியோகிக்கப்பட்டன.

இதில், திருகோமலை மாவட்டத்தைச் சேர்ந்த மூவினங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 15 க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர் பங்குபற்றியிருந்தனர்.

இந்தச் சர்வதேச தினத்தையிட்டு சுதந்திர ஊடக இயக்கம், யாழ். ஊடக மையம், கிழக்கு ஊடக

# தற்போதைய நெருக்கடியால் மாணவர் வருகை 50 சதவீதமாக குறைந்துள்ளது

ஏ.எச்.ஏ ஹுஸைன்

தற்போது நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாக வாகரைப் பிரதேச மாணவர் வருகை, 50 சத வீதமாகக் காணப்படுவதோடு மாணவர் இடைவிலகலும் அதிகரித்துள்ளதாக மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலாளர் ஜி. அருணன் தெரிவித்தார்.

இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் நலிவுற்ற பெண்கள், சிறுவர்கள் தொடர்பான சமூக அபிவிருத்தி அமலாக்கத் திட்டத்தின் வெளிப்படுத்துகை பிரதேச மட்ட நிகழ்வு, வாகரை கலாசார மத்திய நிலையத்தில் திங்கள்கிழமை (31) நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டு, பிரதேச செயலாளர் அருணன் மேலும் கூறியதாவது: வாகரை பிரதேச செயலகப் பிரிவிலிருந்து, அநேகமான தாய்மார், வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடு செல்லுதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் மாணவர்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது.

பொருளாதாரப் பிரச்சினைக்கும் போஷாக்குப் பிரச்சினைக்கும் எம்மால் இயலுமான நடவடிக்கைகள்



மேற்கொள்ளப்படும். இளைஞர் அபிவிருத்தி அகம், வேர்ள்ட் விஷன் போன்ற தன்னார்வத் தொண்டர் அமைப்புகளின் சேவைகளும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே பிள்ளைகளைக் கட்டாயம் பாடசாலைகளுக்கு அனுப்ப பெற்றோரும் பாதுகாவலர்களும் முயற்சிக்க வேண்டும் என்றார்.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனம் வாகரை பிரதேச செயலகப் பிரிவில் நலிவுற்ற பெண்கள், சிறுவர்கள் தொடர்பான சமூக அபிவிருத்தி அமலாக்கத் திட்டத்துக்கு நிதி அனுசரணை வழங்குவது குறிப்பிடத்தக்கது.



தமிழ் மக்களின் எதிர்காலத்தை

# குழிதோண்டிப் புதைக்கும் வேலைத் திட்டத்தில் ஹரிஸ் எம்.பி

காரைதீவு சகா, கனகராசா சரவணன்

கல்முனை வடக்கு பிரதேசம் நிர்வாக ரீதியாக இயங்குகின்றது. அதன் நிர்வாக நடைமுறைகளை முடக்குகின்றார்கள். அதற்கு அரசாங்கத்தில் இருக்கின்ற சில அதிகாரிகள் துணையாக இருக்கின்றனர். தமிழ் சமூகத்தையும் முஸ்லிம் சமூகத்தையும் சிங்கள மக்களையும் இணைக்கின்ற அரசியல்வாதிகளை உருவாக்கவேண்டும். இதன் மூலம் தான் இந்த மாவட்டம் மாத்திரமல்ல, மாகாணம் மாத்திரமல்ல, இந்த நாடும் முன்னேறும் என்று தவராசா கலையரசன் எம்.பி தெரிவித்தார்.

சொறிக்கல்முனை ஹொலிகுறோஸ் மகா வித்தியாலய அதிபர் அருட்சகோதரி சிறியபுஷ்பம், 2022ஆம் ஆண்டுக்கான 'குரு பிரதீபா பிரபா' சிறந்த அதிபர் விருது பெற்றதை கௌரவிக்கும் முகமாக இடம்பெற்ற விழாவில் நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சொறிக்கல்முனை சமூகநல மேம்பாட்டு அமைப்பினரும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரும் இணைந்து இந்த பாராட்டு விழாவை நேற்றுமுன்தினம் (01) நடத்தியது.

கலையரசன் எம்.பி தொடர்ந்து அங்கு கூறியதாவது: கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தை முடக்க வேண்டும் என்பதற்காக பல குழுக்களை அமைத்து, தமிழ் மக்களின் எதிர்காலத்தை குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்ற வேலை திட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் செயல்படுகிறார்.

நாட்டிலேயே தமிழ் பேசும் இனம் என்ற அடிப்படையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது. வடக்கு கிழக்கு தாயகம் என்பது, தமிழ், முஸ்லிம் மக்களின் தாயகமாகும்.

அன்று இருந்து இன்று வரை விட்டுக் கொடுத்து வந்தவர்கள் நாங்கள் தான். எந்தக் கட்டத்திலும் முஸ்லிம் மக்களையும் இணைத்துத் தான் எமது பேச்சும் இருக்கும்; செயலும் இருக்கும். நல்லுறவு, புரிந்துணர்வு என்பவை எதிர்காலத்தில் கேள்விக்குறியாக இருக்கும் என்றார்.

கோப்பாய் மாவீரர் துயிலும்

# இல்லத்துக்கு முன்பாக குழப்பம்

நிதர்சன் விநோத்

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு முன்பாகவுள்ள வீதியை, தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று முன்தினம் (01) சிரமதானம் செய்ய முற்பட்ட போது குழப்பமான சூழல் ஏற்பட்டது.

மாவீரர்களை நினைவு கூரும் கார்த்திகை மாதம் ஆரம்பித்துள்ள நிலையில், குறித்த வீதியை சிரமதானம் செய்ய முற்பட்டபோது, அதற்கு இடையூறு ஏற்படுத்திய ஸ்ரீ லங்கா இராணுவத்தினர், அந்த வீதியில் பௌத்த கொடிகளை நாட்டுவதற்கு முற்பட்டனர்.



இதனால் இரு தரப்பினருக்கும் இடையில் குழப்பமான சூழல் ஏற்பட்டது. சிரமதானம் செய்தவர்களை, இராணுவத்தினர் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தினர். எனினும், சில மணி நேரத்தின் பின்னர் இராணுவத்தினர் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

அச்சுவேலியில் தொடரும் வழிப்பறி:

# காதைக் கிழித்து தோட்டைப் பிடுங்கி கொள்ளை

எம். றொசாந்த்

அச்சுவேலி பகுதியில் மூன்று பெண்களிடம் வழிப்பறி கொள்ளையர்கள் கத்தி முனையில் நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

அச்சுவேலி வைத்தியசாலை வீதியில் நடந்து சென்ற மூன்று பெண்களிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் விலாசம் கேட்பது போன்று பாசாங்கு செய்து, திடீரென கத்தியை காட்டி மிரட்டி, நகைகளை கொள்ளையடித்து தப்பிச் சென்றுள்ளனர்.

அதன்போது பெண்ணொருவரின் தோட்டைக் கழட்டும் போது, அது கழறாத போது, பெண்ணின் காதைக் கிழித்து, தோட்டைப் பிடுங்கி எடுத்துள்ளனர். அதனால் அப்பெண்ணின் காதில் காயம் ஏற்பட்ட நிலையில், அச்சுவேலி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

# மன்னார் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு

மன்னார் நிருபர்

மன்னாரில் உள்ள அரச சார்பற்ற நிறுவனத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் மற்றும் குறித்த நிறுவனத்தில் அத்துமீறி நுழைந்து பணியாளர்களை அச்சுறுத்தியமை தொடர்பாக, மன்னார் பொலிஸ் நிலையத்தில் இரண்டு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டபோதும், மன்னார் பொலிஸார் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை குறித்து, குறித்த அரச சார்பற்ற நிறுவனம் நேற்று (02) வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தனர்.

பணியாளர்களை அச்சுறுத்தியமை தொடர்பான முறைப்பாடு ஒகஸ்ட் மாதம் எட்டாம் திகதியும் திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஒக்டோபர் 27 ஆம் திகதியும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

இதையடுத்து, மன்னார் பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தபோதிலும் இரு முறைப் பாடுகளுக்கும் உரிய தீர்வை, பாதிக்கப்பட்டவர்களுக்கு மன்னார் பொலிஸார் பெற்றுக் கொடுக்காது, அசமந்த போக்குடன் செயற்படுவதாக குற்றம் சுமத்தி, அரச சார்பற்ற நிறுவனத்தினர் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

புருசோத்தமனின்

# 14ஆம் ஆண்டு நினைவேந்தல்



எம். றொசாந்த்

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் செல்லத்துரை புருசோத்தமனின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் (01) யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களால் அனுஸ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவரான புருசோத்தமன், 2006-2007 காலப்பகுதியில் கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராகப் பொறுப்பேற்று, மாணவர் நலனிலும் பல்கலைக்கழக நலனிலும் அக்கறையுடன் செயற்பட்டதுடன் தமிழ்த் தேசிய நலனிலும் பற்றுடையவராகத் திகழ்ந்தார்.

இந்த நிலையில், 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி சுட்டு படுகொலை செய்யப்பட்டார்.

# ஊடகவியலாளர் ரமேஷ் உயிரிழப்பு

எம். றொசாந்த்

சுயாதீன ஊடகவியலாளரான செல்வராசா ரமேஸ் (வயது 53) மாரடைப்பு காரணமாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

உள்ளூராட்சி மன்ற உதவியாளராகவும் சமூக செயற்பாட்டாளராகவும் யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் உள்ளிட்டவற்றில் சுயாதீன ஊடகவியலாளராகவும் பணியாற்றி வந்த இவர், 'ஹேமலதா' ஞாபகார்ந்த நிதியத்தின் தலைவராகவும் இருந்து குறிப்பிடத்தக்க சமூக சேவைகளை ஆற்றி இருந்தார்.



வட்டுக் கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரின் பழைய மாணவரான இவர், மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள், மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெற்று, நவாலி, ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

சேவைக்கால நிறைவு ஆசிரிய இடமாற்றம்

# இடைநிறுத்தத்தைக் கண்டித்து பேரணி

அ. அச்சுதன்

திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு முன்பாக, வெளிவலயத்தில் கடமையாற்றும் ஐந்து தொடக்கம் எட்டு வருட ஆசிரிய சேவையைப் பூர்த்தி செய்தும் இன்று வரைக்கும் ஒரே பாடசாலையில் பணிபுரியும் தங்களுக்கு, சேவைக்கால நிறைவு ஆசிரிய இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டமை



ஊடாக அநீதி இழைக்கப்படுதாக தெரிவித்து பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சேவைக்கால நிறைவு ஆசிரிய இடமாற்றம் திட்டமிட்டு இடைநிறுத்தப்பட்டமையால் தாங்கள் தொடர்ச்சியாக ஒரே இடத்தில் பணியாற்றவேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் எனவே தீர்மானிக்கப்பட்ட இடமாற்ற செயற்பாட்டை பாரபட்சமற்ற முறையிலும் அரசியல் செல்வாக்குகளுக்கு அப்பாலும் நடைமுறைப்படுத்தக் கோரி இப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

போதையை தரும் வலி நிவாரணி மாத்திரைகளை

# மருத்துவர்களும் விற்பதாக குற்றச்சாட்டு

எம். றொசாந்த்

மருத்துவ சிட்டை இல்லாவிடின் 25 ரூபாய் வலி நிவாரணி மாத்திரைகளை 250 ரூபாய்க்கு சில மருந்தகங்களில் விற்பனை செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு ஆளுநர் அலுவலகத்தில், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் திங்கட்கிழமை (31) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

சில வலி நிவாரணி மாத்திரைகளை மருத்துவர்களின் பரிந்துரை சிட்டை இன்றி, விற்பனை செய்வது சட்டவிரோதமானதாகும். இவ்வாறான நிலையில், வடக்கில் உள்ள சில மருந்தகங்களில் 25 ரூபாய் பெறுமதியான வலி நிவாரணி மாத்திரையை, மருத்துவர்களின் பரிந்துரை சிட்டை இல்லாமல், 250 ரூபாய்க்கும் அதிகமாக விலையில் விற்பனை செய்வதாகவும் மருத்துவர்கள் சிலரும் இந்த மாத்திரைகளை சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்து வருவதாகவும் குறித்த கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

பிளவு கொண்ட அரசியல் போக்கில்

# நீடித்துச் செல்ல முடியாது

## ஜீவன் எம்.பி உறுதி

■ மலையக நிருபர்கள்

மலையக மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் மலையகத்தின் ஏனைய அரசியல் தரப்புகளுடன் புரிந்துணர்வுடனும், நல்லெண்ணத்துடனும் செயற்படுவதற்கு தான் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், மலையகக் கட்சிகள், வெறுப்பு அரசியலுடன் தொடர்ந்தும் பயணம் செய்வது உகந்ததல்ல என்று ஊடக அறிக்கையை வெளியிட்டு மலையக கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமையக திறப்பு விழாவில் பங்கேற்குமாறு மலையக அரசியல் கட்சிகளும், தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கங்களும் மனமுவந்து எனக்கு அழைப்பு விடுத்ததன் காரணமாகவே, நான்



அந்நிகழ்வில் பங்கேற்று இருந்தேன்.

அழைப்பு விடுத்தால் அதனை ஏற்றுக் கொண்டு செல்வதுதான் மனித நாகரிகம். நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்ற உணர்வு எமக்குள் இருக்க வேண்டும் என்பது எனது அவாவாகும்.

நான் இந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டு, அங்கு சென்றமை குறித்து பலருக்கு பலவித வேறுபட்ட உணர்வுகள் இருக்கலாம். ஆனால், எமது சமூகத்தை முன்னேற்றுவதற்கு ஒன்றிணைந்த வேலைத்திட்டம் அவசியம் என்பதை நாம் மறக்கலாகாது. அதற்கான ஆரம்பமே இதுவாகும்.

இதேவேளை, நான் சஜித் பிரேமதாஸ மற்றும் பழனி திகாம்பரம் ஆகியோருடன் இணைந்து அரசியல் செய்வதற்காக அந்நிகழ்வில் கலந்துக்கொள்ளவில்லை. மாறாக புரிந்துணர்வுடன் கூடிய மலையக அரசியல் ஒருமைப்பாட்டுக்காகவே கலந்து கொண்டேன் என்பதை ஆணித்தனமாக இவ்விடத்தில் குறிப்பிடுகிறேன்.

அதேநேரத்தில் வெறுப்பையும், எதிர்ப்பையும் வைத்து கொண்டு இனிமேலும் அரசியல் செய்ய முடியாது. அவ்வாறான பிளவு கொண்ட அரசியல் போக்கில் நாம் நீடித்துச் செல்ல முடியாது என்பது எனது குறுகிய கால அரசியல் வாழ்வில் நான் கற்றுக் கொண்ட அனுபவம் ஆகும்.

ஆகையால் அன்பினாலும் நல்லிணக்கப்பாட்டினாலுமே எமது மக்களுக்கான நன்மைகளை சாத்தியப்படுத்த நாம் அனைவரும் பயணிக்க வேண்டுமென அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# விபத்தில் பெண் பலி; இருவருக்கு காயம்

■ எம். செல்வராஜா

தனியார் பஸ்ஸொன்றும் ஓட்டோவொன்றும் நேருக்கு நேராக மோதி விபத்துக்குள்ளாகியதில் பெண்ணொருவர் பலியானதுடன் மேலுமிருவர் ஆபத்தான நிலையில், பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பதுளை- பண்டாரவளை பிரதான வீதியில் ஹல்பே எனும் இடத்தில் இவ்விபத்து நேற்று (02) இடம்பெற்றுள்ளது.

பூனாகலை தோட்டத்தைச் சேர்ந்த ராஜரட்ணம் பரமேஸ்வரி என்ற 33 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார். அவரது கணவனும் சகோதரனும் பலத்த காயங்களுக்குள்ளாகி பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயரிழந்த பெண்ணும் காயமடைந்தவர்களும் ஓட்டோவில் பயணித்தவர்கள் என தெரிவித்துள்ள எல்ல பொலிஸார், தனியார் பஸ்ஸின் சாரதியை கைதுசெய்துள்ளதுடன், விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

■ நவி

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கம்பளை, குறுந்துவத்த பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொலஸ்பாகை, மல்கொல்ல பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வனவிலங்குகளை வேட்டையாடுவதற்காக



சந்தேகநபரால் குறித்த துப்பாக்கி தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குறுந்துவத்து பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரை கம்பளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூளைச்சாவு அடைந்தவரின் சிறுநீரகம் பொருத்தப்பட்டது

■ பாலித ஆரியவன்ஸ

மூளைச்சாவு அடைந்தவரின் சிறுநீரகங்களில் ஒன்று, அவரது குடும்பத்தாரின் விருப்பத்துடன் மற்றொருவருக்கு பொருத்தப்பட்டுள்ளது.

பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த 55 வயது நோயாளர் ஒருவருக்கு இந்தச் சிறுநீரகம் நேற்று முன்தினம் (01) அதிகாலை பொருத்தப்பட்டுள்ளது என வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் கயான் குரே தெரிவித்துள்ளார்.

ஹசலக பிரதேச சபையில் சாரதியாக கடமையாற்றி வந்த 48 வயதான சமிந்த, நவம்பர் மாதம் 26ஆம் திகதி வேலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் ஏற்பட்ட விபத்தில் தலையில் கடுங்காயத்துடன் மஹியங்கனை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

எனினும், அவரது நிலைமை கவலைக்கிடமாக காணப்பட்டதால் பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், அவர் மூளைச்சாவு அடைந்துள்ளதாக வைத்தியர்கள் அவரது குடும்ப உறவினர்களுக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து உயிரிழந்தவரின் உடல் அவயங்களை வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு அவரது மனைவியும் பிள்ளைகளும் இணங்கியுள்ளனர்.

இதனையடுத்து இவரது சடலம், இலங்கை விமானப்படையினர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு ஒக்டோபர் 31ஆம் திகதியன்று ஹெலிக்கொப்டரின் மூலமாக அவசரமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த மூளைச்சாவு அடைந்த நபரின் முக்கிய உடல் உறுப்புகளை ஏனைய நோயாளர்களுக்கு தானமாக வழங்குவதற்கு, அவரது உடல் அவசரமாகக் கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டது.

அவரது இதயமானது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிசிச்சை பெற்று வரும் நோயாளி ஒருவருக்கு பொருத்தப்பட உள்ளதாகவும் சிறுநீரகம், கல்லீரல் போன்ற அவயங்கள் பதுளை மற்றும் கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதுடன், ஒரு சிறுநீரகம் பதுளை பொது வைத்தியசாலையின் நோயாளி ஒருவருக்கு நேற்று முன்தினம் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக்கழக மாணவன் தந்தையுடன் கைது

■ ஷேன் செனவிரத்ன

ஹெரோய்ன் போதைப் பொருளுக்கு அடிமையான தந்தை ஒருவரும், அவரது மகனான பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் கண்டி பொலிஸ் தலைமையக பொலிஸாரின் ஊழல் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருளுக்கு அடிமையாகிய தந்தையாலேயே குறித்த மாணவனும் போதைப்பொருளுக்கு அடிமையாகி உள்ளதாகவும் இவர்கள் இவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட போது, அவர்களிடம் போதைப்பொருள் பக்கெட்டுகள் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

25 வயதுடைய குறித்த மாணவன் பல்கலைக்கழகம் ஒன்றில் 4ஆம் வருடத்தில் கற்று வருவதாகவும் சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# உலருணவு பொதிகளை இன்று வழங்க ஏற்பாடு

■ ஆ.ரமேஸ்

ஜப்பான் அரசாங்கத்தின் உதவி ஊடாக முன்னெடுக்கப்படும் உலக உணவு திட்டத்தின் கீழ், வலப்பனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெருந்தோட்ட மக்கள் மற்றும் கிராம மக்களுக்கு அத்தியாவசிய உலருணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு இராகலையில் இன்று (3) காலை நடைபெறவுள்ளது.

குடும்ப வருமானம் குறைந்த, தெரிவு செய்யப்பட்ட 4,000 குடும்பங்களுக்கு உலக உணவு திட்டம் ஊடாக இந்த உலருணவு பொதிகள் வழங்கப்படவுள்ளன. இது தொடர்பில் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப்படையில் இராகலை தோட்டத்தில் முதல் முறையாக இந்த உணவு வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



## டிஜிட்டல் நூலகம்

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் டிஜிட்டல் நூலகம் அமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், இரத்தினபுரி, ஓப்பநாயக்க வெலிகபொல பிரதேச சபை வளாகத்தில் சகல வசதிகளையும் கொண்டு அமைக்கப்பட்ட டிஜிட்டல் நூலகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (சிவாணி ஸ்ரீ)

# 2 பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் 10 பேர் காயம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

எதிரும் புதிருமாக அதிவேகத்துடன் பயணித்த இரண்டு தனியார் பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 10 பேர் காயமடைந்து நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹட்டனிலிருந்து கண்டி நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸொன்றும் கண்டியிலிருந்து ஹட்டன் நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸொன்றும் நாவலப்பிட்டி-மிபிட்டிய பகுதியில் நேற்று (02) காலை 7.30 மணியளவில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன என நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களுள் பஸ்களின் சாரதிகளும் உள்ளடங்குவதாகத்




தெரிவித்த பொலிஸார், அவ்வீதியில் அடிக்கடி விபத்து இடம்பெறும் பகுதியிலேயே இந்த விபத்தும் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்த பொலிஸார், அதிக வேகமே விபத்துக்கான காரணம் என்றும் தெரிவித்துள்ளனர்.

# அலுவலகம் திறக்கப்பட்டது

■ என் ஆராச்சி

சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் கேகாலை மாவட்ட பிராந்திய அலுவலகம் தெஹியோவிட்ட, ஈரியகொல்ல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (01) திறந்து வைக்கப்பட்டது.

குறித்த பிரதேசத்தில் உள்ள சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தப் புதிய அலுவலகம் பெருந்தோட்டத்துறை இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையால் திறந்து வைக்கப்பட்டது.

கேகாலை மாவட்டத்தில் சுமார் 37 ஆயிரம் சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்கள் உள்ளனர், அவர்களில் 20 ஆயிரம் பேர் யட்டியந்தோட்டை, தெரணியகல, தெஹியோவிட்ட, ருவன்வெல்ல, புளத்கொஹூபிட்டிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இவ்வாறு சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாகக் காணப்படுகின்றனர்.

கேகாலை மாவட்டத்தில் 16 ஆயிரம் ஹெக்டேயரில் தேயிலை பயிரிடப்படும் நிலையில், இதில் 10 ஆயிரம் ஹெக்டேர் துன்கோரல பகுதியில் காணப்படுகின்றது.




# பாவனைக்கு உதவாத அரிசி, யோகட் சிக்கின

■ ராமு தனராஜா

பசறை சுகாதார பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, பசறை நகருக்கு கொண்டு வரப்பட்டிருந்த பாவனைக்கு உதவாத ஒரு தொகை அரிசி கைப்பற்றப்பட்டுள்ளது.

கல்முனையில் இருந்து லொறியொன்றில் விற்பனைக்காக நேற்று முன்தினம் (01) கொண்டு வரப்பட்ட 10 கிலோ கிராம் நிறையைக் கொண்ட 100 அரிசி மூடைகள், 25 கிலோ கிராம் நிறையைக் கொண்ட 17 அரிசி மூட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் குளிரூட்டப்படாத வாகனத்தில் விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட பொதி செய்யப்பட்ட நான்கு டசின் யோக்கட்டுகள் அடங்கிய 20 பெட்டிகளும் பசறை சுகாதார பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# ஒழுக்கமுள்ள சமூகத்தை கட்டியெழுப்ப ஒழுக்கமே அவசியம்

எந்தவொரு தொழில் செய்வோருக்கும் நெறிமுறைகள் உள்ளன. அந்த நெறிமுறைகளில் பிறழ்வு ஏற்பட்டால், அது அந்தந்தத் தொழிலையும் அதுசார்ந்த துறைகளைச் சார்ந்தவர்களையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்க வழிசமைத்துவிடும்.

ஒரு தொழிலில் ஈடுபட்டிருப்பதால் மட்டும் ஒருவர் தொழில் வல்லுநர் ஆக்கிவிட முடியாது. அந்தத் தொழில் தொடர்பான தகுதிகளைப் பூர்த்தி செய்து, நெறிமுறைகளைப் பேணுவதன் மூலமே தொழில்முறையை உருவாக்க முடியும் என்பதை சகலரும் புரிந்துகொள்ள வேண்டும்.

சமூகத்தில் இடம்பெறும் சம்பவங்களை பார்க்குமிடத்து, இவர்களும் இப்படியா என விழிபிதுங்கச் செய்துவிடுகின்றன. ‘ஒரு பாணை சோற்றுக்கு ஒரு சோறு பதம்’ என்பதைக் கையிலெடுக்கும் பெரும்பாலானவர்கள், அந்தத் துறைகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அப்படிப்பட்டவர்கள்தான் என்ற முத்திரையைக் குத்திவிட்டு, சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தொடங்கிவிடுகின்றனர்.

ஒவ்வொருவரும் தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை எப்படியேனும் வாழலாம். எனினும், பொதுவெளியில் நாகரிகமாகவும் ஏனையோர் மதிக்கும் வகையிலும் நடந்துகொள்ளவேண்டும்; வாழவேண்டும். இல்லையேல், அவரது தொழில்சார்ந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு, அவரது நடத்தை அவப்பெயரை ஏற்படுத்திக்கொடுத்துவிடும்.

திருட்டு, கொள்ளை, வழிபறிகள், ஏமாற்றுதல் உள்ளிட்ட சமூக விரோத குற்றச்செயல்கள், ஒவ்வொரு நாளும் செய்திகளாக வலம்வருகின்றன. திருடர்களின் கைவரிசையை விடவும், மதிப்புமிக்க தொழிலில் இருப்பவர்கள் அல்லது அவர்களைப் போன்று உடையணிந்தோர், இன்றேல் போதனைகளைச் செய்வோர் போன்றோரின் அட்டகாசங்களுக்கு குறைவே இல்லை.

கடையொன்றுக்குள் சென்றிருந்த பௌத்த பிக்கு ஒருவர், விலை குறைந்த அலைபேசியொன்றை மிகவும் இலாவகமாக எடுத்து, தன்னுடைய பைக்குள் போட்டுக்கொண்டு மெல்ல நழுவிய சம்பவம் தொடர்பிலான வீடியோ, சமூக வலைத்தளங்களில் வைரலாகியிருந்தன.

இந்நிலையில், பாரிய ஊழல் மோசடியில் ஈடுபட்டிருந்தார் என அண்மையில் கைதுசெய்யப்பட்ட பெண்ணொருவருக்கு பூரண ஒத்துழைப்பை நல்கினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் மற்றுமொரு தேரர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நீதிமன்றத்தில் உள்ளதால், எவரையும் குற்றவாளியின் கணக்குக்குள் போட்டுவிடமுடியாது. ஆக, இந்தச் செய்தியை இத்துடன் நிறுத்திக்கொள்வோம்.

அனைத்து வகையான தொழில் வல்லுநர்கள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள், பேராசிரியர்கள் ஆசிரியர்களால் உருவாக்கப்படுகிறார்கள். ஒரு முழு தேசத்தின் எதிர்காலமும் ஆசிரியரின் தோள்களில் தங்கியுள்ளது. அந்த வகையில் ஆசிரியர் ஓர் உன்னத மனிதர். அதனால்தான் ஒட்டுமொத்த சமுதாயமும் குருவை வணங்குகின்றது.

இவ்வாறான நிலையில், ஆசிரியர் ஒருவர் ஆசிரியையை ‘நைட் கிளப்’க்கு அழைத்துச் சென்று, ஹோட்டல் அறையில் இரவைக் கழித்துவிட்டு, வந்த சம்பவம் தொடர்பிலான செய்தி முகஞ்சுளிக்க செய்துவிட்டது.

இது ஓர் உதாரணமாகும். திரைமறைவில் பல சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம். எனினும், ஒழுக்கம் மிக்கஎதிர்கால சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்புமிக்க பணியில் இருக்கும் ஆசிரியர்கள், உதாரணபுருசத்தனத்துடன் ஒழுக்கமாக இருத்தல் காலத்தின் தேவையாகும்.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்



ஒருவர் தன்னில் இருந்துதான் விடுதலை பெறவேண்டும். அதேபோல், பிறரிடம் இருந்தும் விடுதலை பெறவேண்டும். பிரச்சினைகளை உருவாக்கியவர்களிடம் இணையத்தேவையே இல்லை.

மனிதர்கள் எந்த நேரமும் ஏதாவது பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலாமல், மனம் குமைந்தபடி இருக்கிறார்கள். தேவையற்ற எண்ணங்களை அறுக்க, மனிதரால் முடிவதில்லை. அதனோடு சங்கமித்துவிடுகின்றார்கள்.

தனது ஆத்மாவை அமைதியாக வைத்திருக்க வேண்டிய கடமை, யாவருக்கும் உண்டு. எனவே, தன்னை உணர்ந்து கொண்டு தேவையற்ற சுமைகளை அறுத்துவிடுவது நல்லது.

நாங்கள் பல சந்தர்ப்பங்களில், தேவையற்ற விடயங்களில் பிறர் பொருட்டு, ஆஜராகி விடுகின்றோம். இதனால் அமைதி குன்றுகின்றது. உதவி புரிதல் எமது கடமை. அதனால், தேவையில்லாமல் பொறியில் சிக்குவது புத்திசாலித்தனமானது அல்ல!

எனவே, பிறரிடம் இருந்தும் விடுதலை பெறவேண்டியவராக இருக்க வேண்டும். அதற்காக உறவுகள், நட்புகளை வெறுக்கக்கூடாது. எனவே, உள்ளம் நல்லதைச் சொன்னால் கேளுங்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

### மேய்ப்பன் இல்லாத

# ஆட்டு மந்தையான தமிழரசுக் கட்சி



புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கை தமிழரசுக் கட்சி, மேய்ப்பன் இல்லாத ஆட்டு மந்தையாக அலைக்கழிந்து கொண்டிருக்கின்றது. கட்சியின் தலைவராக ‘மேய்ப்பனாக’ இருக்க வேண்டிய மாவை சேனாதிராஜாவோ, அலைக்கழியும் மந்தைக் கூட்டத்தில் வலுவிழந்த ஆடாக அல்லாடுகிறார்.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில், தமிழரசுக் கட்சி, தன்னைத் தானே அசிங்கப்படுத்தி, மக்களிடம் வெளிப்படுத்திக் கொண்ட அளவுக்கு, தமிழ்த் தேசிய அரசியலில் இயங்கும் எந்தவொரு கட்சியும் நடந்து கொண்டதில்லை.

கட்சியின் தலைவரான மாவை தொடங்கி, கட்சியின் பெரும்பாலான தலைவர்கள், வேட்பாளர்களாக போட்டியிட்டவர்கள், போட்டியிட சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள் என்று தமிழரசுக் கட்சிக்குள் இருக்கின்ற பல்வேறு தரப்பினரும், தங்களுக்குள் பலமாக மோதிக் கொண்டார்கள். அது, நேரடி மோதலாக மாத்திரமல்லாமல், காட்டிக் கொடுப்பதாகவும் முதுகில் குத்துவதாகவும் கூட இருந்தது.

அதுதான், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பெருந்தோல்விக்கு காரணமானது. அதனால்தான், இன்றைக்கு கூட்டமைப்புக்குள் ஒற்றைத் தலைமையாக ஆளுமை செலுத்திவந்த தமிழரசுக் கட்சியை, பங்காளிகளான டெலோவும் புளொட்டும் தாண்டிச் செல்லக் காரணமாகி இருக்கின்றது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தமிழர் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்துக் கொண்டு, தந்தை செல்வாவால் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி, அதன் செல்நெறி குறித்து தெளிவான வரையறைகளை கொண்டிருந்தது.

பௌத்த சிங்கள ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தொடர்ச்சியாக அஹிம்சை வழிப்போராட்டத்தை கனதியாக முன்னெடுத்தது. வெற்றி தோல்விகளுக்கு அப்பால், தமிழரசுக் கட்சிக்கான கறுப்புப் பக்கங்கள் என்று பெரிதாக ஏதும் இல்லை. அதுதான், காணாமற்போன தமிழரசுக் கட்சியை, தமிழீழ விடுதலைப் புலிகள் மீட்டெடுத்து, கூட்டமைப்பின் தலைமைக் கட்சி என்கிற நிலையில் நிறுத்தியமைக்கும் காரணமாகும்.

தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் கரைந்துபோன ஒரு கட்டத்தில், வடக்கு - கிழக்கில் இருந்து இல்லாமற்போய்விட்டது. கூட்டணிக்குள் இருந்த தலைவர்களில் அநேகர், தமிழரசுக் கட்சிக்காரர்கள் என்ற போதிலும், அவர்கள் கூட்டணியின் ‘உதய சூரியன்’ சின்னத்தோடு அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தேர்தல்களில் போட்டியிட்டுவிட்டு, ‘மாதிவல’ வீட்டுத் தொகுதிக்குள் பெரும்பாலும் பதுங்கிக் கொண்டு விட்டார்கள்.

ஆனால், அவர்களை எல்லாம் அழைத்து, தமிழ்த் தேசிய கூட்டமைப்பை வலுவாக்கி, 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியையும் அதன் வீட்டுச் சின்னத்தையும் தமிழ் மக்கள் மத்தியில் கொண்டுவந்து சேர்ந்தது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆவார். அதனால்தான், தமிழரசுக் கட்சியின் மீள்எழுச்சி சாத்தியப்பட்டது. புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னரும் தமிழ்த் தேசிய அரசியலை வழிநடத்தும் சந்தர்ப்பத்தையும், தமிழரசுக் கட்சிக்கு அது ஏற்படுத்திக் கொடுத்தது.

தந்தை செல்வாவால் ஆரம்பிக்கப்பட்டு, தலைவர் பிரபாகரனால் மீட்டெடுக்கப்பட்ட தமிழரசுக் கட்சியின் இன்றைய நிலையைக் காணும் போது, தமிழ் மக்கள் இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டியிருக்கும்.

தமிழரசுக் கட்சியின் தலைவராக இரா. சம்பந்தன் இருந்த காலம் வரையிலும்கூட, கட்சி குறிப்பிட்டளவு கட்டுக்கோப்பாக இருந்தது. ஆனால், கட்சியின் தலைமைத்துவம் மாவையிடம் வந்த நாள் முதல், கட்சிக்குள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, உள்வீட்டுக் குழப்பங்கள் எழுந்தன. அதுவும், மத்திய குழுவில் இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட குழப்பங்களின் எண்ணிக்கை அதிகம் என்று சொல்லலாம்.

தமிழ்த் தேசிய அரசியலில், ஆத்மார்த்தமாக இயங்க நினைக்கின்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு, தமிழரசுக் கட்சியை உத்வேகத்தோடு நகர்த்திச் சென்று, மக்களுக்கான அரசியலை செய்ய வேண்டும் என்கிற பேரவா உண்டு. ஆனால், அதற்கான வாய்ப்புகளை மாவை சேனாதிராஜா, சி.வி.கே சிவஞானம் தொடங்கி வயது மூப்பாலும் அதன் அவஸ்தைகளாலும் அல்லாடும் தலைவர்கள் தடுக்கிறார்கள்.

அண்மையில்கூட, தமிழரசுக் கட்சியின் நல்லூர் தொகுதிக் கிளைக் கூட்டம் நடைபெற்றது. அதில், புதிய நிர்வாகிகளாக சிவஞானம் உள்ளிட்ட எழுபது வயதைத் தாண்டியவர்களே, பிரதான பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள், தங்களது தொகுதிக் கிளைக்குள் கூட சென்று, மக்கள் அரசியல் செய்வதற்கான உடல் ஆரோக்கியத்தோடு இல்லாதவர்கள்.

அதிகபட்சம், மார்டின் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் கூடி, கதை பேசி, கலைந்து செல்வார்கள்; அவ்வளவுதான்! இதனால், இந்த வயோதிபர்களின் ஓய்வுகாலம் வேண்டுமானால் கழிந்து போகலாம். மாறாக, தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்பட்டுவிடாது.

மக்களுக்கான அரசியலை தேர்ந்தெடுக்கும் எந்தக் கட்சியாக இருந்தாலும், அது இளைஞர்களை உள்வாங்கிக் கொண்டும் அவர்களை முன்னிறுத்தியுமே செயற்பட விரும்பும்.

தந்தை செல்வாவின் காலத்திலும் தமிழரசுக் கட்சிக்குள்ளும் அதுதான் நிகழ்ந்தது. அதனால்தான், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா போன்றவர்கள் அரசியலுக்குள் வரவும் கோலோச்சவும் முடிந்தது.

ஆனால், இளைஞர்கள் அரசியலுக்கு அவசியமானவர்கள்; அவர்களே மக்களிடம் நேரடியாக ஊடாடல்களை செலுத்தக் கூடியவர்கள் என்று உணர்ந்து, அதன் வழியாக வந்த மாவை சேனாதிராஜாவும் கூட, தமிழரசுக் கட்சியை முதியவர்களின் கூடாரமாக மாற்றுவதில் முனைப்பாக செயற்படுகின்றார். அவரின் பதவி என்கிற பேராசை, கட்சியை முழுவதுமாக முடக்கும் நிலைக்கு கொண்டு வந்து சேர்ந்திருக்கின்றது.

> **மக்களுக்கான அரசியலை தேர்ந்தெடுக்கும் எந்தக் கட்சியாக இருந்தாலும், அது இளைஞர்களை உள்வாங்கிக் கொண்டும் அவர்களை முன்னிறுத்தியுமே செயற்பட விரும்பும்**

கொழும்பில் நடைபெறும் முக்கிய சந்திப்புகளுக்குச் செல்ல வேண்டுமாக இருந்தால், பாராளுமன்ற உறுப்பினர் பதவி முக்கியம். அதன் மூலமாகவே எரிபொருள் மானியம் கிடைக்கும். அதற்காக தேசிய பட்டியல் ஆசனம் தனக்கு வழங்கப்பட வேண்டும் என்று பதவிக்காக மன்றாடியவர் மாவை.

கட்சியின் தலைவராக அவர் பதவிக்கு வந்து ஏழு வருடங்கள் கடந்து விட்டன. ஆனால், இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டிய கட்சியின் தேசிய மாநாடுகள் ஒழுங்காக நடத்தப்படவில்லை. அவர் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர், ஒருமுறை மாத்திரமே மாநாடு நடத்தப்பட்டிருக்கின்றது.

கடந்த பொதுத் தேர்தலில், கட்சி மாபெரும் தோல்வி கண்டிருக்கின்ற நிலையில், தலைமையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. அதனால், தன்னுடைய பதவிக்கு பாதிப்பு வந்துவிடும் என்ற நோக்கத்தால், தேசிய மாநாட்டைக் கூட்டுவதை மாவை தவிர்த்து வருகிறார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற ஜனநாயக தன்மை பேணாத அமைப்புகள்கூட, இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை தேசிய மாநாட்டை நடத்துகின்றன. அப்படியிருக்க, ஜனநாயகத்தின் வழியில் வந்த தமிழரசுக் கட்சி, இவ்வளவு மோசமான உட்கட்சி ஜனநாயக மறுப்பில் ஈடுபடுகின்றமை அபத்தமானது.

தமிழரசுக் கட்சியின் முக்கிய பதவிகளில் வயோதிபர்கள் அமர்ந்து கொண்டு, கட்சியின் செயற்றிறனை மழுங்கடித்துவிட்டதால், கட்சியின் ஓர்மம் இழக்கப்பட்டுவிட்டது. மக்கள் அரசியலுக்காக வரத் துடிக்கும் இளைஞர்கள்கூட, தமிழரசுக் கட்சிப் பக்கம் தலை வைக்கப் பயப்படுகிறார்கள்.

ஏனெனில், மக்கள் அரசியலுக்காக ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டிய தாங்கள், தமிழரசில் இணைந்துவிட்ட பின்னர், பதவிகளைப் பிடித்து தொங்கிக் கொண்டிருக்கும் வயோதிபர்களுக்கு எதிராக போராடி நேரத்தை செலவளிக்க வேண்டி வருமோ என்று நினைக்கிறார்கள்.

ஏற்கெனவே நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் இருக்கின்றது. அது இளைஞர்கள் தலையில் பெரும் சுமையை ஏற்றியிருக்கின்றது. தங்களது எதிர்காலம், குடும்பங்களின் வாழ்வாதாரம் தொடங்கி அனைத்தையும் கவனிக்க வேண்டும். கடந்த காலத்தில் எட்டு மணித்தியாலம் உழைத்தால் இப்போது 16 மணித்தியாலம் உழைக்க வேண்டிய அவசியநிலை ஏற்பட்டுள்ளது; அவ்வளவு நெருக்கடி நிலைமை.

அப்படியிருக்க, ஒருநாளில் மீதமுள்ள எட்டு மணி நேரத்தில் உண்டு, உறங்கி, குடும்பத்துடன் நிம்மதியாகக் கழிக்கவே அனைவரும் விரும்புவர். இல்லாமல், தமிழரசுக் கட்சிக்குள் சேர்ந்து மூத்தவர்களோடு மோதுவதற்காக செலவிடத் தயாராக மாட்டார்கள்.

தமிழ்த் தேசிய அரசியலில் இன்னமும் தமிழரசுக் கட்சியே தலைமைக் கட்சியாக இருக்கின்றது. ஆனால், இளைஞர்களை உள்வாங்கி கட்சியை சீராக்கி செயற்றிறன் உள்ளதாக மாற்றாவிட்டால், தமிழரசுக் கட்சியின் தோல்வி கடந்த காலத்தைக் காட்டிலும் இன்னும் மோசமாக இருக்கும்.

அதனை, தந்தை செல்வா, தலைவர் பிரபாகரன் தொடங்கி தமிழ்த் தேசியத்துக்காக அர்ப்பணித்தவர்களின் ஆன்மாக்கள் ஒருபோதும் மன்னிக்காது. ஏனெனில், தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாத காலத்தில், தமிழரசுக் கட்சியின் இருப்பு தவிர்க்க முடியாதது.

## கடிதங்கள்

### மழை வெள்ளத்தில் மக்கள் அவலம்

வடக்கில், குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் வடகீழ் பருவப்பெயர்ச்சி மழைக் காலம் ஆரம்பித்ததை அடுத்து, கடந்த சில நாள்களாக கடும் மழை பெய்து வருகின்றது.

இதனால், பள்ளமான காணிகளில் நீர் தேங்கி நிற்பதுடன் அத்தகைய காணிகளில் வசிக்கும் மக்களும் பாரிய அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றார்கள்.

குறிப்பாக, வீட்டுத் திட்டங்களுக்கான நிதி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பிலும் அரைகுறையாக நிதியைப் பெற்றுக்கொண்டவர்களும் தற்காலிக குடிசைகளில் வசித்தார்கள். இவர்கள் இந்த மழை வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட கைவேலி, மயில்குஞ்சன்குடியிருப்பு, இரணைப்பாலை, ஆனந்தபுரம் போன்ற தாள்நிலப்பகுதிகள் வெள்ளநீரால் நிரம்பியுள்ளன.

பாண்டியன் வெளி வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கள்ளியடி வயல் நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பேராற்று நீர் பாய்ந்தோடுவதால் சுமார் 1,000 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளார்கள்.

ஒரு மாத பயிராக காணப்படும் நிலையில் வெள்ளநீர் மூன்று நாள்களுக்கு நிற்குமாக இருந்தால், பயிர்கள் முற்றாக அழிவடையும் நிலை ஏற்படும் எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் வள்ளிபுனம் பகுதியில் வீதி ஓராமாக நின்ற பாரிய புளியமரம் சரிந்து வீதியின் குறுக்கே வீழ்ந்துள்ளதால் வீதியின் ஊடாகப் பயணிப்பதில் பயணிகள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

செ. கீதாஞ்சன்



## நினைவுதினம்

இலக்கிய கலாநிதி புலவர்மணி பண்டிதமணி பெரியதம்பிப்பிள்ளையின் 44ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவு மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று (02) காலை 9 மணியளவில் மட்டக்களப்பு, புளியந்தீவு மத்தியில் அமைக்கப்பட்டுள்ள சிலைக்கு அருகாமையில் நடைபெற்றது.

'உள்ளதும் நல்லதும்' எனும் இலக்கிய நூல் மூலம் இலக்கியத்துறையில் சஞ்சரித்து பல இலக்கிய நூல்களையும் தமிழ்மொழி சார்ந்த சஞ்சிகைகளையும் நூல்களையும் உருவாக்கி, தமிழ்த்துறைக்கு பாரிய பங்களிப்பு செய்துள்ளார். 1899.1.8 மண்டூர் மண்ணில் அவதரித்த இவர், 1978.11.2 ஆம் திகதி இலக்கியத்துறையில் இருந்து விடைபெற்று இயற்கை எய்தினார்.

க. விஜயரெத்தினம்





## ஆத்மாக்கள் தினம்





'சின்னரோம்' என அழைக்கப்படும் நீர்கொழும்பு நகரில், அதிக எண்ணிக்கையான கத்தோலிக்க மக்கள் வசிக்கின்றனர். இவர்கள், இறந்த தமது உறவுகளை அடக்கம் செய்த கல்லறைகளுக்கு சென்று, ஆத்மாக்கள் தினமான நேற்று (02) வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

நீர்கொழும்பு, மஞ்சொக்காஹேன பொது மயானம், கடற்கரை தெரு ரோமன் கத்தோலிக்க மயானம் ஆகியவற்றில் நடைபெற்ற உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்மாக்களுக்கான ஆராதனைகளில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

எம்.இஸட் ஷாஜஹான்



## பயிற்சிப் பட்டறை



இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் undp நிறுவனத்தின் அனுசரணையில், சிடி எல் ஜி திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாணத்தில் செயற்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்களில் 50 வயதுக்கு குறைந்த ஆண், பெண் உள்ளூராட்சி உறுப்பினர்களுக்காக, சமூக வலைத்தளங்களை கையாளும் முறை தொடர்பான பயிற்சி பட்டறைகள் நடத்தப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்துக்கான முதல் பயிற்சி பட்டறை அக்கரைப்பற்று மாநகர சபை மண்டபத்தில் நேற்று (2) புதன்கிழமை நடைபெற்றது.

வி.ரி சகாதேவராஜா



## கையளிப்பு

சமூக ஆர்வலரும் ஆசிரியருமான எஸ்.ஆர்.எம் முஹ்ஸி, ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு 1,400 மாதிரி வினாத்தாள்களை அச்சிட்டு, புத்தளம் சாஹிரா ஆரம்ப பாடசாலை அதிபர் ஏ.எம். ஜவாதிடம் ஆசிரியர் ஏ.சீ. ரியாஸ் சகிதம் கையளித்தார்.

எம்.யூ.எம் சனூன்





## சந்தோசம் இல்லம்

கிளிநொச்சி, இரத்தினபுரம் பகுதியில் விசேட தேவைக்கு உட்பட்டவர்களுக்கான காப்பகமான சந்தோசம் இல்லம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என். சரவணபவனால் நேற்று முன்தினம் (01) திறந்து வைக்கப்பட்டது.

சுப்பிரமணியம் பாஸ்கரன்

உத்தர கன்னடா

# திருந்தாத இளைஞர்கள்

தொங்கு பாலத்தின் மீது இளைஞர்கள் சிலர் காரை ஓட்டிச் சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உத்தர கன்னடா மாவட்டம், எல்லாப்பூரில் சிவபுரா என்ற கிராமம் உள்ளது. இக்கிராமத்தில் ஓடும் காளி ஆற்றின் குறுக்கே தொங்கு பாலமொன்று உள்ளது.

இத்தொங்கு பாலத்தைப் பார்வையிட ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள். இந்நிலையில், அண்மையில் அப்பகுதிக்கு காரில் சுற்றுலா வந்த இளைஞர்கள் சிலர், குறித்த தொங்கு பாலத்தின் மீது காரை ஓட்டிச் சென்றுள்ளனர்.

இதற்கு அப்பகுதியில் இருந்த மக்கள் பலரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். எனினும் எதிர்ப்பு தெரிவித்தவர்களை குறித்த இளைஞர்கள், ஆபாசமாகப் பேசிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது,

இந்நிலையில், பாலத்தில் இளைஞர்கள் காரைச்செலுத்தும்



வீடியோ இணையத்தில் வெளியாகியதை அடுத்து, குறித்த இளைஞர்களை உடனடியாகக் கைதுசெய்யுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் குஜராத்தில் மோர்பி என்ற ஆற்றின் குறுக்கே உள்ள தொங்கு பாலம் அறுந்து விழுந்ததில் 141 பேர் உயிரிழந்தனர்.

எனினும், விபரீதத்தை உணர்ந்துகொள்ளாது, இளைஞர்கள் குறித்த தொங்கு பாலத்தின் மீது காரை ஓட்டிச் சென்றுள்ளமையை பலரும் கடுமையாகக் கண்டித்துள்ளனர்.

சென்னை



# அண்ணாமலை மீது 6 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு

திராவிட முன்னேற்ற கழகத்தின் நிர்வாகி சைதை சாதிக், அண்மையில் கட்சி சார்பில் நடந்த நிகழ்ச்சியொன்றில், பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயற்குழு சிறப்பு அழைப்பாளர் குஷ்பு குறித்து ஆபாசமாகப் பேசினார்.


இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், சைதை சாதிக்கின் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்நிலையில், சைதை சாதிக்கின் பேச்சைக் கண்டித்து பா.ஜ.க மகளிரணி சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் பா.ஜ.க தலைவர் அண்ணாமலை கலந்துகொண்டார். இந்நிலையில் குறித்த ஆர்ப்பாட்டம் அனுமதியின்றி நடைபெற்றதால் அண்ணாமலை, பா.ஜ.க மகளிரணி நிர்வாகிகளைப் பொலிஸார் கைது செய்தனர்.

பின்னர், கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இச்சம்பவத்தை அயடுத்து, அண்ணாமலை மீது 6 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, பா.ஜ.கவைச் சேர்ந்த 370 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.




பெங்களூர்

# 'நம்ம யாத்ரி' சேவை அறிமுகம்

பெங்களூரில் 'ஓலா', 'ஊபர்' போன்ற தனியார் நிறுவனங்கள், தொலைபேசி செயலி (Apps) மூலம் வாடகை ஓட்டோ மற்றும் கார் சேவைகளை வழங்கி வருகின்றன.

எனினும் அண்மைக் காலமாகக் குறித்த நிறுவனங்கள், பயணிகளிடம் கூடுதல் கட்டணம் வசூலிப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதையடுத்து அந்நிறுவனங்கள் வாடகை ஓட்டோ சேவை வழங்க தடை விதிக்கப்பட்டது. பின்னர், அரசு அனுமதியுடன் சேவை வழங்கலாம் எனக் கூறப்பட்டது.

**பாதிக்கப்பட்ட பெங்களூர் ஓட்டோ ஓட்டுனர்கள் சங்கம், 'நம்ம யாத்ரி' என்ற தொலைபேசி செயலியை உருவாக்கியுள்ளனர்.**
**இதன் மூலம் தனியார் நிறுவனங்களை சாராமல், சுயமாக வாடகை ஓட்டோ வண்டிச் சேவை வழங்க முடியும்**

இதனால் பாதிக்கப்பட்ட பெங்களூர் ஓட்டோ ஓட்டுனர்கள் சங்கம், 'நம்ம யாத்ரி' என்ற தொலைபேசி செயலியை உருவாக்கியுள்ளனர்.

இதன் மூலம் தனியார் நிறுவனங்களை சாராமல், சுயமாக வாடகை ஓட்டோ வண்டிச் சேவை வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை

# எலோனோடு கைகோர்த்த தமிழர்

உலக பணக்காரர்களின் வரிசையில் முதல் இடத்தில் உள்ளவரும், டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகருமான எலோன் மஸ்க், பிரபல சமூக வலைத்தளமான டுவிட்டரை அண்மையில் கொள்வனவு செய்திருந்தார்.

இந்நிலையில், டுவிட்டரின் முன்னணி அதிகாரிகள் தன்னையும் டுவிட்டரையும் தவறாக வழிநடத்துவதாகத் தெரிவித்த எலோன், மூன்று அதிகாரிகளைப் பணி நீக்கம் செய்தார்.

இந்நிலையில், எலோன் மஸ்க் ட்விட்டரில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் குறித்து ஆலோசனைகள் வழங்கவும், பொறுப்பாக நிர்வகிக்கவும் இந்திய அமெரிக்கரும் சென்னையைச் சேர்ந்தவருமான ஸ்ரீராம் கிருஷ்ணன் என்பவரை நியமித்துள்ளார்.

இது குறித்து ஸ்ரீராம் கிருஷ்ணன் கருத்துத் தெரிவிக்கையில் "எலோன் மஸ்கிற்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகின்றேன். அவர் தலைமையில் ட்விட்டர் நிறுவனம் சர்வதேச அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்தியா

# ஒரே நாளில் 53 பேர் மரணம்

இந்தியாவில் கொரோனா தொற்றுப்பரவல் மீண்டும் தீவிரமடைந்து வருகின்றது.

அந்தவகையில் நேற்று முன்தினம் (01) மாத்திரம் கொரோனா தொற்றால் 53 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதில் கோவாவைச் சேர்ந்த 46 பேர் அடங்குவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மத்திய பிரதேசம்

# மகனால் மனைவியை கொன்ற கணவர்

மத்திய பிரதேசம், இந்தூர் நகரில் வசித்து வருபவர் ஹீராலால். பாதுகாவலராகப் பணிபுரிந்து வரும் அவருக்கும், அவரது மகனுக்கும் அண்மையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதனை கவனித்த லாலின் மனைவி, இருவரையும் சமரசப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதன்போது அவர் தனது மகனுக்கு ஆதரவாக இருந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

இதில் ஆத்திரம் அடைந்த ஹீராலால், தன்னிடமிருந்த ரைபிள் ரக துப்பாக்கியை எடுத்து மனைவியை நோக்கிச் சுட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் லாலின் மனைவி சம்பவ இடத்திலேயே



**தந்தையையும் மகனையும் சமாதானப்படுத்தும் முயற்சியில், அவர் மகனுக்கு ஆதரவாக இருப்பதாகக் கருதிய கணவன், துப்பாக்கியால் மனைவியை சுட்டார்**

உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் லாலை கைது செய்துள்ளதோடு, அவரிடம் இருந்த துப்பாக்கியையும் கைப்பற்றியுள்ளனர்.

இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்

# பங்களாதேஷை வென்ற இந்தியா



அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், அடிலெய்ட்டில் நேற்று நடைபெற்ற பங்களாதேஷுடனான குழு இரண்டு சுப்பர் -12 போட்டியில் இந்தியா வென்றது. இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷின் அணித்தலைவர் ஷகிப் அல் ஹஸன், இந்திய அணியை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, விராட் கோலியின் ஆட்டமிழக்காத 64 (44), லோகேஷ் ராகுலின் 50 (32), சூரியகுமார் யாதவ்வின் 30 (16), இரவிச்சந்திரன் அஷ்வினின் ஆட்டமிழக்காத 13 (06) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், தஸ்கின் அஹ்மட் 4-0-15-0 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார். பதிலுக்கு 185 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், ஏழு ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 66 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட்ட நிலையில், டக்வேர்த் லூயிஸ் முறையில் 16 ஓவர்களில் 151 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில், ஆரம்பத்தில் அதிரடியாக ஆரம்பித்த லிட்டன் தாஸ் 60 (27) ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த நிலையில், நுருல் ஹஸன் ஆட்டமிழக்காமல் 25 (14), தஸ்கின் அஹ்மட் ஆட்டமிழக்காமல் 12 (07) ஓட்டங்களைப் பெற்றுப் போராடிய நிலையில் 16 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 145 ஓட்டங்களையே பெற்ற பங்களாதேஷ் ஐந்து ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக விராட் கோலி தெரிவானார்.

இந்நிலையில், முன்னர் நடைபெற்ற சிம்பாப்வேயுடனான போட்டியில் நெதர்லாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சிம்பாப்வே

சிம்பாப்வே: 117/10 (19.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: சிகண்டர் ராசா 40 (24) ஓட்டங்கள். பந்துவீச்சு: போல் வான் மீக்கரன் 3/29 [4], பஸ் டீ லீட் 2/14 [4], பிரண்டன் குளோவர் 2/29 [4], லோகன் வான் டீ பீக் 2/17 [2.2], பிரட் கிளாசென் 1/17 [4])


நெதர்லாந்து: 120/5 (18 ஓவ. ) (துடுப்பாட்டம்: மக்ஸ் ஓ டௌட் 52 (47) ஓட்டங்கள். பந்துவீச்சு: றிச்சர்ட் நகரவா 2/18 [4], பிளஸிங் முஸர்பனி 2/23 [4], டென்டாய் சட்டாரா 0/22 [4], ஷோன் வில்லியம்ஸ் 0/21 [3], சிகண்டர் ராசா 0/6 [1])

போட்டியின் நாயகன்: மக்ஸ் ஓ டௌட்

இதேவேளை, சிட்னியில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பாகிஸ்தானும், தென்னாபிரிக்காவும் மோதவுள்ளன.

சம்பியன்ஸ் லீக்:

## இன்டர் மிலனை வென்ற பயேர்ண் மியூனிச்



சம்பியன்ஸ் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் வென்றது.

மியூனிச் சார்பாக, பெஞ்சமின் பவார்ட், எரிக் மக்ஸிம் சுப்போ மோட்டிங் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலியுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூல் வென்றது. லிவர்பூல் சார்பாக, மொஹமட் சாலா, டர்வின் நுனேஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், பிரெஞ்சு லீக் 1 கழகமான மர்ஸெய்யின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம், இறுதி 16 அணிகள் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, போர்த்துக்கல் கழகமான எப்.சி போர்ட்டோவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் தோற்ற ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்றிட், யூரோப்பா லீக்குக்கும் தகுதி பெறாமல் போனது.

## நீச்சல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

ஹஸ்பர்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான நீச்சல் போட்டியில் பங்கு பெறும் திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக்கேணி அறபா கல்லூரி மாணவர்களுக்கான நீச்சல் உபகரணங்களை, கிண்ணியா பிரதேச சபை பிரதித் தலைவரும், குறிஞ்சாக்கேணி அறபாக் கல்லூரியின் பயிற்றுவிப்பாளருமான-ஏ.ஆர். எம். அஸ்மியின் வேண்டுகோளுக்கு இணங்க குறித்த பாடசாலைக்கே சென்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், முன்னால் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை பிரதி அமைச்சருமான-அப்துல்லாஹ் மஹ்ரூப் வழங்கி அம்மாணவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.



லெஜன்ட்ஸ் வெற்றிக் கிண்ணத் தொடர்

## சம்பியனான பரஹதெனிய

எம்.யூ.எம். சனூன்

புத்தளம் நகரில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களை உள்ளடக்கிய லெஜன்ட்ஸ் கால்பந்தாட்ட அணியின் ஏற்பாட்டில், அணிக்கு எழுவர் கொண்ட லெஜன்ட்ஸ் வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் பரஹதெனிய அணி சம்பியனானது.

புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் கற்பிட்டி எல்.எப். சீ அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வென்றே பரஹதெனிய சம்பியனானது.

சம்பியனான பரஹதெனியவுக்கு வெற்றிக் கிண்ணமும், 150,000 ரூபாய் பணப்பரிசும், இரண்டாமிடம் பெற்ற கற்பிட்டி எல்.எப். சீ அணிக்கு கிண்ணமும், 1000,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டது.




தொழில் ரீதியான வீரர்களை உருவாக்கும் புதுமையான இம் முயற்சியில் தேசம் கடந்த வெளிநாட்டு வீரர்களும் இத்தொடரில் பங்கேற்றமை சிறப்பம்சமாகும்.

ரஷ்யா

## உயிருடன் மக்களை புதைக்கும் நிறுவனம்

மன உளைச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை உயிருடன் மண்ணில் புதைக்கும் பணியில் ரஷ்யாவைச் சேர்ந்த நிறுவனமொன்று ஈடுபட்டு வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

Prekated Academy ` என்ற நிறுவனமே மன உளைச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் விதமாக “மனநோய் சிகிச்சை" என்ற புதிய சிகிச்சை முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இச்சிகிச்சை முறையின் படி வாடிக்கையாளர்கள் ஒரு மணி நேரம் உயிருடன் சவப்பெட்டியில் புதைக்கப்படுகின்றனர்.

இது பார்ப்பதற்கு பயங்கரமாகத் தோன்றினாலும், மக்கள் தங்கள் கவலைகள் மற்றும் அச்சங்களைப் போக்கவும், சில மனநல திறன்களை வளர்க்க உதவும் இம்முறை உதவி செய்வதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இதன் மூலம் வாழ்வதற்கான விருப்பம் மக்கள் மத்தியில் உண்டாக்கும் எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இச்சிகிச்சைக்கு இலங்கை மதிப்பில் சுமார் 20 மில்லியன் ரூபாய் வசூலிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



கிரீஸ்

## அகதிகள் படகு கவிழ்ந்ததில் 60 பேர் மாயம்

கிரீஸ் அருகே கடந்த 31ஆம் திகதி, அளவுக்கு அதிகமான அகதிகளுடன் பயணித்த படகொன்று, மோசமான வானிலை காரணமாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் சுமார் 60 பேர் மாயமாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாயமானவர்களை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்விபத்து நேரிட்ட கடல் பகுதி, மிகவும் ஆபத்து நிறைந்த பகுதி என்றும் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா

## உலகிலேயே பயங்கரமான ‘பேய் பொம்மை’

“ரொபர்ட் டோல்”( Robert Doll) என அழைக்கப்படும் பொம்மையானது, உலகின் மிகவும் பயங்கரமான பேய் பொம்மையாகக் கருதப்படுகின்றது.

இப் பொம்மையானது 1905 ஆம் ஆண்டு ரொபர்ட் யூஜீன் என்பவருக்கு, அவரது வீட்டுப் பணிப்பெண் ஒருவரால் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ரொபர்ட் அப்பொம்மைக்கு தனது பெயரின் பாதியை எடுத்து ஜீன் என்று பெயர் சூட்டியிருந்தார்.

இந்நிலையில் நாளடைவில் அப்பொம்மையில் ஏதே மர்மம் இருப்பதாக அவரது வீட்டிற்கு வருகை தருபவர்கள் தெரிவிக்க ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக அப்பொம்மை நகருவதாகவும் ,அதன் காலடிச் சத்தம் கேட்பதாகவும், தன்னைத்தானே சுற்றி வந்ததாகவும், சிரிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.



அதுமட்டுமில்லாது இப்பொம்மையை பார்த்த பின்னரே விபத்து, விவாகரத்து உள்ளிட்ட பல கெட்ட சம்பவங்கள் தமது வாழ்க்கையில் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறு இருப்பினும் ரொபர்ட்டின் திருமணத்திற்குப் பின்னர் குறித்த பொம்மை அவரது வாழ்க்கையில் ஒரு அங்கமாக இருந்ததாகவும், அப்பொம்மைக்கென அவர் தனி அறை ஒன்றை ஒதுக்கியிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொபர்ட் மற்றும் அவரது மனைவியின் மரணத்திற்குப் பின்னர், அப்பொம்மையானது கோரி கன்வெர்டிட்டோ அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரொபர்ட்டின் வீட்டை வாங்கியுள்ள ராய்ட்டர் என்பவர் இது குறித்துக் கூறுகையில் ” ரொபர்ட் டோல் குறித்து பலர் பல்வேறு விதமான மர்மக் கதைகளைக் கூறிவருகின்றனர். ஆனால் எனக்கு அப்படி ஒரு அனுபவமும் இல்லை” என்றார்.

இஸ்ரேல்

## நடுவானில் தீ விபத்து: பயணியால் பரபரப்பு

நடுவானல் பறந்து கொண்டிருந்த விமானத்தில், பயணியொருவர் தீ விபத்தை ஏற்படுத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அண்மையில் இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் இருந்து தாய்லாந்தின் பாங்கொக் நகரை நோக்கிப் பயணித்த விமானத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புகைப்பழக்கத்திற்கு அடிமையான நபர் ஒருவர் விமானத்தின் கழிவறையில் தான் மறைத்து வைத்திருந்த சிகரெட்டை பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.



இதன்போது தான் பற்றவைத்த சிகரெட் துண்டொன்றை அருகில் இருந்த குப்பைத் தொட்டியில் வீசியுள்ள போது எதிர்பாராத விதமாக தீ பற்றி புகை வெளிவர ஆரம்பித்துள்ளர்.

அப்போது கழிவறையில் இருந்த புகை கண்டறியும் கருவிகள் மூலம் விமான பணி பெண்களுக்கு உடனடியாக அவசர தகவல் கிடைத்தது.

இதனையடுத்து அங்கு வந்த அதிகாரிகள் தீயை விரைவாக அணைத்ததால். விமானம் திட்டமிட்டபடி பாங்கொங் விமான நிலையத்தில் பாதுகாப்பாக தரையிறங்கியது.

இந்நிலையில் தாய்லாந்துக்கு சுற்றுலா சென்றுள்ள குறித்த பயணி இஸ்ரேல் தி ரும்பியதும், அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## அகதிகள் மீது துப்பாக்கிச் சூடு

பொருளாதார நெருக்கடி காரணமாக வெனிசூலா, மெக்சிகோ, ஹோண்டுராஸ் போன்ற நாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அமெரிக்காவில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

இந்நிலையில் மெக்சிகோ எல்லை வழியாக அமெரிக்காவிற்குள் ஊடுருவ முயன்றவர்கள் மீது எல்லை பாதுகாப்புப் படையினர் றப்பர் தோட்டாக்களால் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தினால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



ஜப்பான்

## ஜப்பானில் புதுவித உலக சாதனை

ஜப்பானில் ` Hirokazu Tanaka ` என்ற பெயருடன் கூடிய 178 நபர்கள் ஒரே இடத்தில் கூடி கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

இதில், 3 வயது குழந்தை முதல் 80 வயது முதியவர் வரை வயது வரம்பின்றி பலரும் கலந்துகொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Hirokazu Tanaka என்ற அமைப்பு இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து உள்ளனர்.

இதற்கு முன்பாக கடந்த 2005-ஆம் ஆண்டு ` Martha Stewarts `என்ற பெயருடைய 164 நபர்கள் நிகழ்ச்சி ஒன்றில் கூடியிருந்தமையே சாதனையாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 03 நவம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.